Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள்~08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி -14 | 30-07-2003 | புதன்கிழமை | ஓசை 162

படச்சுருள்கள் அனைத்தையும் கனினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ பதிவுகள் சேவைகள், கனினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள், அனைத்திற்கும்
Jaffna Road, Kilinochchi. யாழ் சாலை, (கி-8437) கிளிநொச்சி.

## எமது தேசியத்தலைவரினது வரவை எதிர்பார்த்திருக்கிறோம்

### அன்பரசி நினைவு நிகழ்வில் மூத்த தளபதி கருணா

(மட்டக்களப்பு)

எமது தேசியத் தலைவர் அவர்களை இங்கு அழைத்து வர வேண்டும் என்பது எமது அவா. காலம் கைகூடுமென நம்புவோம் என மட்டு அம்பாறை மூத்த தளபதி கேணல் கருணா அவர்கள் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு நான்காம்முச்சந்தி படைமுகாம் தாக்குதலில் வீரச்சாவடைந்த கப்டன் அன்பரசி உட்பட மூன்று போராளிகளின் எட்டாவது ஆண்டு நினைவு நிகழ்வில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். தரவை மீனகம் படைமுகாமில் ஞாயிறு இரவு இந் நிகழ்வு இடம் பெற்றது.

அன்பரசி படையணி வலிமை மிக்க படையணியாக தமிழீழமெங்கும் போரிட்டு கள அனுபவங்களுடன்

(08ம் பக்கம் பார்க்க)

## டிசம்பரில் தென்மாகாண சபை தேர்தல் நடத்த சந்திரிகா திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் டிசம்பர் மாதம் தென் மாகாணசபைத் தேர்தலை நடாத்துவதற்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த மாகாணசபையின் பதவிக் காலம் முடிவடையவுள்ளதினால் இந்தச்சபையினைக் கலைத்து புதிய தேர்தலை நடாத்தத்திட்ட மிட்டுள்ளது.

சி.சு.கட்சிக்கும் ஜே.வி.பி.இக்கும் இடையில் கூட்டு ஏற்பட்டதும் தமக்குச் சாதகமான சூழ்நிலைகுறித்து பரிசோதித்துப் பார்க்கும் வண்ணம் இத்தேர்தல் நடத்தப்படவுள்ளது.

இதேவேளை மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டதால் அதனைச் சந்திப்பதற்கான வழிவகைகள் குறித்து ஐ.தே.கட்சி இன்று கூடி ஆராயத் திட்டமிட்டுள்ளது.

ஐ.தே.கட்சியின் தலைமையிலான சிறிமோத்தாவில் இக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

# எவ்வாறான இடைக்கால நிர்வாகமாயினும் ஜே.வி.பி. அதனை முழுமையாக எதிர்க்கும்

## செய்தியாளர் மாநாட்டில் டில்வின் சில்வா அறிவிப்பு



**புலிகளுக்கு எவ்வாறான இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட்டாலும் அதனை எதிர்க்கப்போவதாக ஜே.வி.பி.யினர் கூறியுள்ளனர். நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே ஜே.வி.பி.யின் செயலாளர் டில்வின்சில்வா இதனைத் தெரிவித்தார்.**

மக்கள் ஆணை இல்லாமல் புலிகளுக்கோ அல்லது வேறு ஏதேனும் அமைப்புக்கோ நாட்டில் எவ்வகையான ஒரு நிர்வாகம் ஒன்றை வழங்கினாலும் அது சட்டவிரோதமானது என ஜே.வி.பி வலியுறுத்தியுள்ளது.

யுத்தம் புரியாமல் நாட்டை பிரிக்காமல் இப் பிரச்சினையை தீர்ப்பதற்கான வழிவகைகள் தம்மிடம் இருப்பதாகவும், ஆட்சி அதிகாரம் பெற்றவுடன் இதனை அறிவிப்பதாகவும் டில்வின்

(08ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேச்சுநடத்துவதற்காக அரசு மீது வழக்குத் தொடருவோம்

### ஈ.பி.டி.பி செயலாளர் டக்ளஸ் கூறுகிறார்

ஏனைய தமிழ்க் கட்சிகளைக் கலந்தாலோசிக்காது, விடுதலைப் புலிகளுடன் வடக்கு கிழக்கு நிர்வாகம் குறித்துப் பேச்சு வார்த்தைகளை நடாத்துவதற்காக, சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஈபிடிபி செயலாளர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்துள்ளார்.

"நாங்களும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள், எங்களுடனும் வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாகம் குறித்துக் கலந்தாலோசிக்க வேண்டும்" என்று கூறும் தேவானந்தா, ஏனைய தமிழ்க் கட்சிகளின் உரிமைகளை அவமதித்துள்ள தற்போதைய அரசு கட்டப் பிரச்சனைகளைச் சந்திக்கும் என்றும் கூறினார். ஈபிடிபி கட்சி, வடக்கு கிழக்கு இடைக்கால நிர்வாகத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறதா? என்று பத்திரிகை நிருபர் வினாவியதற்குப் பதிலளித்த டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி. கட்சி இத்தகைய இடைக்கால நிர்வாகத்தைத் தமிழர்களுக்கு வழங்கும் விடயத்திற்கு ஆதரவு,

(08ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வவுனியா செயலகத்தின் மீது நள்ளிரவில் நடந்த கைக்குண்டுத் தாக்குதல்

புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறை செயலகத்தின் மீது நேற்று முன்தினமிரவு 11.00 மணியளவில் இனம் தெரியாதவர்களினால் கைக்குண்டு ஒன்று வீசப்பட்டுள்ளது.

அரசியல்துறையினர் தங்கும் அரசியல் துறை செயலகத்தின் பின் பகுதியில் இக் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. இச் சம்பவத்தின் போது புலிகளின் வவுனியா நகர்வலய அரசியல் பொறுப்பாளர் குட்டி அவர்கள் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.இது தொடர்பாக வவுனியா மாவட்ட அரசியல்துறை பொறுப்

(08ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் புலிகளின் செயலகம் மீதான தாக்குதலுக்கு வெ.அ.ஒன்றியம் கண்டனம்

வவுனியாவில் நேற்று முன்தினமிரவு புலிகளின் அரசியல்துறை செயலகம் மீது நடத்தப்பட்ட கைககுண்டு தாக்குதலை கண்டித்து வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கையொன்றை நேற்று விடுத்துள்ளது. அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது; வவுனியா வைரவ புளியங்குளத் திலுள்ள பழைய பால் சபையாக இருந்த இடம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை செயலக மாக இயங்கி வருகிறது. இவ் இடத்தில் நேற்று

(08ம் பக்கம் பார்க்க)

### - குரங்குப் பாஞ்சான் முகாம் விவகாரம் -

## அரச வானொலிச் செய்திக்கு விடுதலைப்புலிகள் மறுப்பு

குரங்குப்பாஞ்சான் முகாமை மூடுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் முடிவு செய்துள்ளதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வெளியிட்ட செய்திக்கு விடுதலைப் புலிகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை மாவட்ட அரசியல் துறை இந்த மறுப்பை வெளியிட்டுள்ளது.

குரங்குப்பாஞ்சான் முகாமை 24 மணி நேரத்திற்குள் மூடிவிடுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் முடிவுசெய்துள்ளதாகவும் இது குறித்து தற்போது கிழக்கில் தங்கியுள்ள புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பிராந்தியத் தலைவர்களுடன் ஆராய்ந்துள்ளதாகவும் இலங்கை அரச வானொலி சேவையான இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் நேற்று இரவு செய்தி வெளியிட்டிருந்தது.

இச்செய்தியை மறுத்த விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறை முகாமை அகற்றுவது குறித்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்று இரவு வெளியிட்ட செய்தி உண்மைக்குப் புறம்பானது எனக் கூறியுள்ளது. (25)

## தமிழ்ச்செல்வன் பாவனைக்குத் ஹெலி

(கொழும்பு)

அரசு சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக தமது பிரதேச உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்துவதற்காக அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனுக்கு உலங்குவானூர்தி ஒன்றை வழங்கியதாகப் பாதுகாப்பமைச்சு கூறியுள்ளார்.

### - இ.நி.கூட்டமைப்பு திட்டவரைவு -

## பொதுமக்களுக்கு விளக்க கூட்டங்கள் நடத்த சு.க.முடிவு!

(கொழும்பு)

அரசாங்கத்தினால் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை திட்ட வரைவு குறித்து பொதுமக்களுக்கு விளக்கிக் கூறுவதற்காகப் பல கூட்டங்களை சிறிலங்கா சுதந்திரக்கட்சி நடாத்தத் தீர்மானித்துள்ளது என அக்கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

"நீங்களும் நாங்களும்" என்ற தலைப்பில் இந்தக் கூட்டங்களை நடாத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. இத்திட்ட வரைவு குறித்து தென் பகுதி பொதுமக்கள் மத்தியில் விளக்கமின்மை காணப்படுகிறது. இதனால் இது குறித்து விளக்கப்படுத்த

(08ம் பக்கம் பார்க்க)

## மட்டு. அம்பாறை பொது அமைப்புகளுடன் அரசியல்துறைப் பொறுப்பாளர் சந்திப்பு

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை நேற்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள், மூத்த தளபதி கேணல் கருணா ஆகியோர் சந்தித்துப் பேசியுள்ளனர். கரடியனாறிலுள்ள தேனகம் விடுதியில் இச்சந்திப்பு காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மூன்று மணித்தியாலயங்கள் நடைபெற்றது.

இச்சந்திப்பில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட கல்வி, பொருளாதார மற்றும் மக்களின் அன்றாடத் தேவைகள் பாதுகாப்பு போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன. இச்சந்திப்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட விசேட தளபதி ரமேஸ், பிராந்திய அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், பிராந்திய துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் கிருஸ்ஷன் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (25)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

ஆறுமுகம் கெந்தேஸ்வரன் ஆகிய எனது அடையாள அட்டை, மோட்டார் சைக்கிள் பதிவுசெய்தசிட்டை, பாண்டியன் வாணிபத்தின் மோட்டார் சைக்கிள் வாங்கிய காசும் சிட்டை என்பன கச்சேரியில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (3585)


## வருடாந்த மகோற்சவம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 02ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 7ம் நாள் வேட்டைத் திருவிழாவும், 8ம் நாள் சப்பறமும், 9ம் நாள் தேரும், 10ம் நாள் தீர்த்தமும், 11ம் நாள் பூங்காவனமும் இங்கு நடைபெறவுள்ளது. (26)

# கேரைதீவு கிளாலிக் கடற்பகுதியில் கடற்படையினரின் குற்றச்சாட்டுகள் குறித்து மீனவர்களிடம் கண்காணிப்புக்குழு விசாரணை

கேரைதீவு கிளாலி கடற்பகுதியில் தொழில் செய்யும் மீனவர்கள் தம் கடற்போக்குவரவு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு இடையூறாக வலை வீசுகின்றார்கள் என்ற கடற்படையினரின் குற்றச்சாட்டு தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலக அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

படையினரின் இம்முறைப்பாடு தொடர்பாக சம்பந்தப்பட்ட அப்பகுதிகளில் தொழிலுக்குச் செல்லும் மீனவசங்கங்களின் தலைவர்கள் மற்றும் வடமாகாண கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் தவரடணம் ஆகியோரை நேற்றுமுன்தினம் வட மாகாண கடற்றொழிலாளர் சங்க சமாச கட்டடத்தில் வைத்து சந்தித்த போர்நிறுத்த கண்காணிப்புக்குழு வின் யாழ். மாவட்ட கடற்பிராந்திய கண்காணிப்புக்குழு அதிகாரி பேஸ்டன் இது சம்பந்தமாக விசாரணைகளை நடத்தியுள்ளார்.

இதன்மீது குறிப்பிட்ட கடற்பரப்பில் படையினரின்ட பாவனைக்காக விடப்பட்டுள்ள பிரதேசம் மற்றும் மீனவர்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் பிரதேசங்களின் எல்லைகளை தேட்டறிந்த கண்காணிப்புக்குழு அதிகாரிக்கு கடற்றொழிலாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில் மீனவர்கள் மீது படையினர் குற்றம் சுமத்தியுள்ள பிரதேசம் உண்மையிலேயே கடற்படையினருக்கென ஒதுக்கப்பட்ட பிரதேசமா? அவ்வாறு அப்பகுதிகளில் வலைகளை வீசுவதால் கடற்படையினருக்கு இடையூறு விளைவிக்குமா? என்பதை நேரில் சென்று பார்வையிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாஸ் நடைமுறை, பாதுகாப்பு வலயம் என பல கெடுபிடிகளையும் திணித்து வருகின்ற கடற்படையினரின் நடவடிக்கை குறித்தும் இந்திய மீனவர்கள் மற்றும் இலங்கை கடற்படையினரின் அத்துமீறிச் செய்யும் நடவடிக்கைகள் என்பனவற்றை கருத்திற்கொண்டு போர் நிறுத்த கண்காணிப்புக்குழு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கண்காணிப்புக்குழு அதிகாரிக்கு சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)

## கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடல் எதிர்வரும் 03ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கிளி.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் கிளி.மாவட்டத்தைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகளை சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (பா)

## வகுப்புக்கள் ஆரம்பம்

கிளிநொச்சி கூட்டுறவுக் கல்லூரியில் நடைபெறும் மொழித்திறன் விருத்திக்கான ஆங்கில வகுப்புக்கள் எதிர்வரும் 04ம் திகதி திங்கட் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும் என போதனாசிரியர் தெரிவிக்கிறார்.

- சமுதாய முன்னேற்ற நிலையத்தின் -

## தொழிற்பயிற்சி நிலையம் நடத்திய சிறப்பு வகுப்புக்கள் நிறைவு

(அலுவலக செய்தியாளர்)

சமுதாய முன்னேற்ற நிலையம் வடக்கு கிழக்கு தொழிற் பயிற்சி நிலையத்தினால் பெண்களுக்கான தொழிற் பயிற்சி சிறப்பு வகுப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சிநெறி வன்னி பெருநிலப்பரப்பில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களிலிருந்தும் மாவீரர், போராளி குடும்பங்களில் இருந்தும் தொழில் வாய்ப்பின்றியிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சியை வழங்கி அவர்களை தொழிலில் ஈடுபடுத்தும் பொருட்டு வழங்கப்பட்டுள்ளது. சமுதாய முன்னேற்ற நிலையம் வடக்கு தொழில் பயிற்சி நிலையத்துடன் இணைந்து மூன்றுமாத சிறப்புப் பயிற்சியினை வழங்கி பெறுமதிமிக்க சான்றிதழ்களை வழங்கியுள்ளது.

மேற்படி பயிற்சி பெற்றவர்களுக்கு ஆடைத் தொழிலுக்கான வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதோடு பிரதேசரீதியாகவும் தையல் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டு, வருகின்றது. சிறப்பு பயிற்சி வகுப்பில் தையல் பயிற்சி தையல் இயந்திரம் திருத்தல், தலைஅலங்காரம், கேக்ஐசிங், திரை அச்சுப்பதிப்பு பொன்ற பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (பா)

## ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதி கிளி.வருகை பாரதிபுரம் கிராமத்தைப் பார்வையிடுவார்

(அலுவலக செய்தியாளர்)

ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதி பிறைன்சிமித் எதிர்வரும் 2ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக கிளி.மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இவருடன் ஜி.றி.இசற் நிக்கொட் நிறுவன ஆலோசகர் இராமலிங்கமும் வருகைதரவுள்ளனர்.

அன்றையதினம் இவர்கள் பாரதிபுரம கிராமத்தைச் சென்று பார்வையிடவுள்ளனர்

மாவட்ட ரீதியாக ஒரு கிராமத்தில் மாதிரி வீட்டுத்திட்டம் அமுல்படத்தப்படவுள்ளதெனவும் இதனடிப்படையில் கிளி.மாவட்டத்தில் மேற்படித் திட்டம் அமுல்படுத்தப் படுவதற்கு பாரதிபுரம் கிராமம் தெரிவுசெய்யப் பெற்றுள்ளதெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (சோ)

## அரச ஒலி, ஒளி ஊடகங்களில் எதிர்க்கட்சியினருக்கு சந்தர்ப்பமில்லை

- பொ.ஐ.மு. பா.உ. ஜெயராஜ் பர்னாண்டோ புள்ளே

அரச ஒலி, ஒளி ஊடகங்களில் அரசாங்கத் தரப்பினருக்கு மட்டுமே வாய்ப்பளிக்கப்படுவதாகவும் எதிர்க்கட்சியினருக்கு சந்தர்ப்பம் வழங்காமல் பாரபட்சம் காட்டுவதாகவும் பொ.ஐ.மு. கம்பஹா மாவட்ட எம்.பி.ஜெயராஜ் பர்னாண்டோ புள்ளே பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

சபையில் சிறப்புரிமைப் பிரச்சினையாகவே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினரால் கேட்கப்படும் கேள்விகளுக்கு ஆளுங்கட்சியினிடமிருந்து உரிய முறையில் பதில் கிடைப்பதில்லை சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சம உரிமை வழங்குவது உறுதி செய்யப்பட வேண்டும் என ஜெயராஜ் பர்னாண்டோ புள்ளே எம்.பி. சபாநாயகரிடம் கேட்டுக் கொண்டார்.

- மின்னொளியில் நடைபெறவுள்ள -

## லெப்செந்தூரன் ஞாபகார்த்த மாபெரும் விளையாட்டுப் போட்டி

(அலுவலக செய்தியாளர்)

லெப்.செந்தூரன் ஞாபகார்த்த மாபெரும் விளையாட்டுப்போட்டி எதிர்வரும் 03.08.2003ஆம் திகதியன்று புதுக்குடியிருப்பு இரணைப்பாலை சென்.அன்ரனீஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இரணைப்பாலை சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் மின்ஒளியில் நடாத்தும் மேற்படி விளையாட்டுப்போட்டி அன்றையதினம் மாலை 6.30 மணிக்கு மேற்படி விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## விசுவமடுப் பிரதேசத்தில் கால் நடை சுகாதாரசேவை

முல்லை. மாவட்டத்தில் இடம் பெறும் கால்நடைகளுக்கான உற்பத்தி, அபிவிருத்தி சுகாதார வேலைத்திட்ட இடம்பெயர் சேவையின் கீழ், யூன் 25 முதல் 28 வரையான காலப்பகுதியில் பின்வரும் வேலைத் திட்டங்கள் விசுவமடுப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டன.

இத் திட்டத்தின் கீழ் தொண்டையடைப்பான் நோய்க்கு எதிரான தடுப்பூசி 1449 மாடுகளுக்கு ஏற்றப்பட்டதுடன், கோழி கொள்ளை நோய்க்கெதிரான தடை மருந்து 600 கோழிகளுக்கும் வழங்கப்பட்டன.

மேலும் 08 மாடுகளுக்கும் 12 ஆடுகளுக்கும் 06 கோழிகளுக்கும் இதர நோய்ச் சிகிச்சையும் அளிக்கப்பட்டதுடன், 01 மாடு செயற்கை முறையில் சினைப்படுத்தப் பட்டுள்ளதாகவும், வெளிக்கள மருத்துவ சேவையினூடாக 02 ஆடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதுடன், 01 ஆடு நலமடிக்கப்பட்டதாகவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் முல்லை.மாவட்ட செயலகம் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (26)

## முன்னைய அரசு யுத்தத்திற்கு செலவிட்டதை நாம் அபிவிருத்திக்கு செலவிடுகிறோம்

அமைச்சர் லக்ஷ்மன் செனிவிரத்ன

முன்னைய அரசாங்கம் யுத்தத்திற்காக செலவிட்ட பணத்தை இன்றைய அரசாங்கம் அபிவிருத்தித் திட்டங்களுக்கு செலவிட்டு வருகிறது. நாட்டில் அமைதி நிலவினால் தான் அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றியளிக்கும். புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் நாட்டில் அமைதி நிலவுகிறது. இந்த அமைதியான சூழ்நிலை நிரந்தரமாக நிலைக்க வேண்டுமென்பதே அனைவரதும் அபிலாசையாகும். அரசாங்கத்தின் முற்போக்குத் திட்டங்களுக்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் என நீர் முகாமைத்துவ அமைச்சர் லக்ஷ்மன் செனிவிரத்ன கூறினார்.

இடைநிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தை மிக விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் சில தீய சக்திகள் அரசாங்கத்தின் முற்போக்குத் திட்டங்களை சீர் குலைக்க முனைந்துள்ளன.

நாட்டில் அமைதியும் அபிவிருத்தியும் ஏற்பட வேண்டுமென விரும்புவோர் பிற்போக்குவாதிகளின் வலையில் சிக்கிவிடக் கூடாது என்றும் கூறினார்.

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கல்வி வலயத்தில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகப் பணிபுரிந்து நிரந்தர நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோருக்கும், ஏனைய பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்குமான அவசர கலந்துரையாடல் நாளை 31ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

கிளிநொச்சி பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாகவுள்ள பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியத்தில் நாளை பி.ப.2.00 மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி கலந்துரையாடலில் அனைத்து பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களையும் தங்களின் உரிய ஆவணங்களுடன் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கிளிநொச்சி கல்வி வலய பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் சங்கச் செயலர் ரி.மனோகரன் வேண்டியுள்ளார். (சோ)

- கொழும்பு-வவுனியா -

## ரயிலில் திருட்டில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது

கொழும்பு- வவுனியா ரயிலில் கடந்த காலங்களில் திருட்டில் ஈடுபட்டுவந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து மீட்கப்பட்ட சோடாபோத்தலில் காணப்பட்ட பானம் இரசாயனப் பரிசோதனைக்கு கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ரயிலில் பிரயாணம் செய்பவர்களுடன் திடீரென நண்பராகி அவர்களுக்கு பானத்தைக் கொடுத்து அவர்களை மயக்கிவிட்டு அவர்களிடமுள்ள நகை, பணம் மற்றும் பெறுமதிவாய்ந்த பொருட்கள் கடந்த காலத்தில் அபகரிக்கப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இவ்வாறான செயலில் ஈடுபடும் ஒரு நபரே கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா பொலிசார் தெரிவித்தனர்.


## 31ஆம் நாள் அஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் திருமதி பூராசா சின்னமலர்

***(நெடுந்தீவைப்பிறப்பிடமாகவும் யோகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்டவர்)***

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் மல்லாவி யோகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பூராசா சின்னமலர் 02.07.2003 இல் காலமான செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்கள் மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்கள், தபால் தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் கூறியவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் இல்லத்தில் 01.08.2003இல் நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:-

**க.பூராசா**
**பிரதானவீதி,**
**யோகபுரம்.**

**கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

(3584)

# ஈராக்கில் தற்போதைய நிலை சிக்கலானது; அமெரிக்காவுக்கு சவாலாகவும் அமைந்துள்ளது!

- இராணுவத் தளபதி ஜெனரல் றிச்சர்ட் மியர்ஸ்

ஈராக்கில் தற்போதுள்ள நிலை மிகவும் சிக்கலானது அமெரிக்க படைகளுக்கு சவால் விடும் வகையிலும் இருக்கின்றது. இவ்வாறு அமெரிக்க இராணுவ தளபதியும் ஈராக்கில் அமெரிக்க படைகளை நிர்வகிக்கும் அதிகாரியுமான ஜெனரல் றிச்சர்ட் மியர்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு இரு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு வந்துள்ள அவர் நேற்றுக்காலை செய்தியாளர்களைச் சந்தித்து பேசினார். இதன்போதே மேற் கண்டகருத்தை வெளியிட்டார்.

ஈராக்கிற்கு படைகளை அனுப்பும்படி இந்தியா உட்பட எந்த நாட்டையும் அமெரிக்கா நிர்ப்பந்திக்கவில்லை.

இராணுவ ஒத்துழைப்புப் பற்றிப் பேசுவதற்காகவே இந்தியா வந்திருக்கின்றேன்.

ஈராக்கில் தற்போதுள்ள நிலைமை மிகவும் சிக்கலானதாக உள்ளது. அமெரிக்க படைகளுக்கு சவால்விடும் வகையில் அங்குள்ள நிலைமைகள் இருக்கின்றன. இந்த நிலைமைகளைச் சமாளிக்க மற்றையநாடுகளின் ஒத்துழைப்பும் தேவை அதே நேரத்தில் இந்தியா உள்ளிட்ட எந்த நாட்டையும் அமெரிக்கா, இராணுவத்தை அனுப்புமாறு நிர்ப்பந்திக்கவில்லை.

ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இனிப் பயங்கரவாதம் வளராத அளவுக்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் ஆப்கானிஸ்தானின் பாதுகாப்புப் பணி விரைவில்நேட்டோ கூட்டமைப்பிடம் ஒப்படைக்கப்படவுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.



பாக்தாத் நெடுஞ்சாலையில் ரோந்து பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப் படைவீரர்.

## மியான்மார் அரசுக்குத் தடை!

மியான்மாரின் இராணுவ அரசு மீது தடைவிதிக்க வழி செய்யும் புதிய சட்டமொன்றில் அமெரிக்க சனாதிபதி புஷ் கையெழுத்திட்டுள்ளார். நோபல் பரிசு பெற்றவரும், மியான்மாரின் சனநாயக ஆதரவுத் தலைவியுமான ஆன் சாங்சூகியை அந்த நாட்டு இராணுவ அரசு சிறையில் அடைத்த பின்னர் இந்தச் சட்டம் கொண்டு வருவது குறித்துப் பல வருடங்களாகப் பரிசீலிக்கப் பட்டு வந்தது.

# ஈராக்கின் முக்கிய நகர்களில் திடீர் சோதனை; சதாமை பிடிப்போமென அமெரிக்கா கூளுரை

சதாம் ஹுசைனும் அவருக்கு நெருக்கமானவர்களும் சுற்றி வளைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளஅமெரிக்க இராணுவம் இனி அவர்களால் தப்பிக்க முடியாது என்று அறிவித்துள்ளது.

ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைனையும், அவருக்கு நெருக்கமானவர்களையும் தேடும் பணியில் அமெரிக்க இராணுவம் தீவிரம் காட்டி வருகின்றது.

இந்த நிலையில் சதாமின் சொந்த ஊரான திக்ரிட் மற்றும் பாக்தாத் நகரில் உள்ள முக்கிய நகரங்களில் அமெரிக்க இராணுவத்தினர் திடீர் சோதனைகளை நடத்திவருகின்றனர்.

இதனால் சதாம் ஹுசைனின் பிடி இறுகி வருவதாகவும், அவர் சுற்றி வளைக்கப்பட்டுள்ளதாகவும் அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

விரைவில் சதாம் ஹுசைனும் அவருக்கு நெருக்கமானவர்களும் பிடிபடுவார்கள் என்றும், இனியும் அவர்களால் தப்ப முடியாது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



கியூப புரட்சியின் 50-வது ஆண்டு நிறைவு விழா கடந்த சனியன்று கொண்டாடப்பட்ட வேளை சன்ரியாகோவில் பாடசாலை மாணவர்கள் தேசியக்கொடியையும் துப்பாக்கியையும் ஏந்திநிற்கின்றனர்.

# சவுதி தலைநகருகே மோதல் இரு பொலிசார் உட்பட எண்மர் பலி!

(றியாத்)

சவுதி அரேபியாவின் தலைநகர் றியாத்தின் வடக்கேயுள்ள பண்ணை ஒன்றில் நேற்று நடைபெற்ற பொலிஸ் தேடுதல் வேட்டையைத் தொடர்ந்து நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் குறைந்தது ஆறு இஸ்லாமியத் தீவிரவாதிகளும் இரண்டு பொலிசாரும் கொல்லப்பட்டுள்ளார்கள். சவுதியரேபியாவில் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைககளுக்கு இடையே இத் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் நடைபெற்றுள்ளதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் கூறுகின்றன மேலும் தேடப்படும் தீவிரவாதிகளை ஆதரிப்பவர்களாகக் கூறி பொலிசார் நான்கு பேரைக் கைது செய்துள்ளார்கள் றியாத்தில் 25 பொதுமக்கள் 9தீவிரவாதிகள் கொல்லப்பட்டமை மற்றும் 12குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்குப் பின்னர் சவுதி அரேபியா தொடர்ந்து பயங்கரவாதத் தேடுதல் வேட்டைகளை நடத்திவருகின்றது.

# ‘சனநாயகத்தை’ நிலைநாட்டுவதற்காக முப்பது நாடுகள் முன்வந்துள்ளன!

- றிச்சர்ட் பௌச்சர் அறிவிப்பு

(வாஷிங்டன்)

ஈராக்கின் அமைதியையும் சனநாயகத்தையும் நிலைநாட்ட 30 நாடுகள் இணக்கம் தெரி வித்துள்ளதாக அமெரிக்கா தெரி வித்துள்ளது.

இந்த 30 நாடுகளின் பெயர் விபரங்களையும் நேற்று முன் தினம் அமெரிக்கா அறிவித்திருந்தது. ஈராக்கில் மேற்கொள்ளப்படும். இராணுவ அல்லது பொலிஸ் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க இந்த நாடுகள் முன்வந்துள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இவ்வாறு சேவை வழங்குவதற்கு சில நாடுகள் ஊதியம் கேட்டதாகவும் இவ்வாறு வழங்கப்படும் சேவைகளுக்கு சம்பளம் வழங்கப்படமாட்டாது எனவும் போக்குவரத்து தங்குமிடங்களுக்கான செலவுகள் மட்டுமே வழங்கப்படும் என்றும் அமெரிக்க இராஜாங்கப் பேச்சாளர் றிச்சர்ட் பௌச்சர் தெரிவித்துள்ளார்.

இதில் பிரான்ஸ், ரஷ்யா, இந்தியா ஆகிய நாடுகளின் பெயர்கள் இடம் பெறவில்லை.

# வழக்கறிஞர்களாக நீதிபதிகளின் உறவினர்; நீதித்துறையின். கௌரவத்தை மீறும் செயல்

130 நீதிபதிகளை மாற்ற வேண்டுகை

(புதுடில்லி)

உயர்நீதிமன்றங்களில் நீதிபதிகளின் உறவினர்கள் வழக்கறிஞர்களாக பணியாற்றுவது லஞ்சம் போன்ற ஊழலுக்கு வழி வகுப்பதுடன், நீதித்துறையின் கௌரவத்தை மீறும் செயல் என்றும் இந்திய பாக் கௌன்சில் கூறியுள்ளது.

அத்துடன் இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக 130 உயர்நீதிமன்ற நீதிபதிகளை மாற்றும் செய்யுமாறும் கோரப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக இந்திய பாக் கௌன்சில் தலைவர் எஸ்.கே. பாவேந்தர் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், நீதிபதிஒருவர் பணியாற்றும் உயர் நீதிமன்றத்தில் அவரது உறவினர் அதே நீதிமன்றத்தில வழக்கறிஞராகச் செயற்படுவது பாக் கௌன்சில் விதிகளுக்கு மீறியது என்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டிலுள்ள 21 நீதிமன்றங்களில் 499 நீதிபதிகள் உள்ளனர். தற்போது 448 நீதிபதிகளுக்கான இடங் கள் நிரப்பப்படாமல் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.



சீனாவில் தென்மாகாணதலைநகரில் பயங்கரவாதம் குறித்த நடிகர்களின் நிகழ்வொன்று. நெருப்பு மற்றும் புகையின் பின்னணியில் பயங்கரவாதத்தின் தன்மையை வெளிப்படுத்துகின்றனர்.

# டெஹல்கா விவகாரத்தைக் கைவிட எதிர்க்கட்சிகள் மறுப்பு!

(புதுடில்லி)

டெஹல்கா ஆயுத பேர ஊழல் பிரச்சினைகுறித்து நாடாளுமன்ற இரு அவைகளிலும் விவாதிக்க வேண்டும் எனும் எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை நாடாளுமன்ற விவகாரத் துறைஅமைச்சர் சுஷ்மா சிவராஜ் நேற்று முன்தினம் நிராகரித்துள்ளார். இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சர்ஜோர்ஜ்பெர்னாண்டஸிற்கு எதிராக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மேற்கொண்டுவரும் புறக்கணிப்புக்கள் முடிவடையும் என்ற நம்பிக்கை குறைந்து விட்டது.

டெஹல்கா பிரச்சினை குறித்து ஏற்கனவே நாடாளுமன்றத்தில் தேவையான அளவு விவாதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே ஜோர்ஜ் பெர்னாண்டஸிற்கு எதிரான புறக்கணிப்புத் தொடரும் என்றும் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ஜெயபால் ரெட்டி கூறியுள்ளார்.

# ஓடும் பேருந்தில் குண்டுவெடிப்பு

(புதுடில்லி)

மும்பை புறநகர்ப்பகுதியில் ஓடிக்கொண்டிருந்த பேருந்தில் நேற்று முன்தினம் வெடிகுண்டு வெடித்தமையினால் 03 பேர் உயிரிழந்துள்ளனர். 32பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவத்தையடுத்து பாரதீய ஜனதா கட்சி, சிவசேனா இன்று மும்பை கதவடைப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

# 1500 நைஜிரியப் படையினர் லைபீரியா பயணமாவர்

லைபீரியாவுக்கு நைஜிரியா 1500 இராணுவத்தினர்களை அனுப்பி வைக்கவுள்ளதாக நைஜிரியா அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதற்கு வெளிநாட்டவர்களின் ஒத்துழைப்பும் தேவை என்று நைஜிரிய சனாதிபதி அறிவித்துள்ளார். ஆனால் லைபீரியாவுக்கு எப்போது இராணுவத்தினர்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளார்கள் என்று அறிவிக்கப்படவில்லை.

# ஆட்சியைக் கைப்பற்ற காலம் கனியும் வரை ஜே. வி. பி. யுடன் கூட்டு தாமதமடையும்

நாட்டுப்பற்றாளர்முன்னணி அமைப்பதற்கு முயலும் சு.க. ஜே.வி.பி. பிரதான பங்காளிகளிடையே இணக்கப்பாடு இன்னமும் ஏற்படவில்லை ஆயினும் பேச்சுவார்த்தைகள் தொடரும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. பெருமளவு விடயங்களில் இணக்கப்பாடு ஏற்பட்டிருக்கின்றபோதும் முன்னணியின் முக்கிய பதவிகளைப் பங்கிடுவதிலும் இனப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பதிலும் முக்கிய முரண்பாடு காணப்படுவதாக தொடர்ந்து கூறப்பட்டுவருகிறது.

இந்த இணக்கப்பாடானது ஆட்சிக்கவிழ்ப்பு, பொதுத் தேர்தலில் போட்டியிடுதல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டிருப்பதால் அதற்கான தருணம் வரும் வரை ஜே.வி.பி.யுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன் றைச் செய்து கொள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவசரப்படவில்லை என்றே தோன்றுகிறது.

ஜே.வி.பி.யுட்னான உடன்பாடு ஏற்பட்ட மறுகணமே ஆட்சிக்கவிழ்ப்பு சாத்தியமாயின் உடன்பாடு உடனடியாக ஏற்பட்டிருக்கக்கூடும். ஆனால் பாராளுமன்றத்தை கலைத்துவிடும் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான காலம் கனிந்து விடாமையாலும், பாராளுமன்றத்தைக் கலைக்காமலேயே ஆட்சியைக் கைப்பற்றும் பலமின்மையாலும் உடன்பாடு தாமதமடைகின்றமை வெளிப்படை.

உடன்பாட்டால் உடனடிப்பயன் கிட்டிவிடாதநிலையில் உடன்பாடொன்றைச் செய்து கொண்டு தேவையற்ற சுமை யொன்றை முன்னரே சுமக்க சனாதிபதி சந்திரிகா விரும்பவில்லை. அதனால் பேச்சுக்கள் தொடர்கின்றனவே தவிர முன்னணி உருவாகிவிடவில்லை.

அதேவேளை பாராளுமன்றத்தைக் கலைத்து விடுவதற்கோ அல்லது பாராளுமன்றத்தில் தேவையான பலத்தைப் பெறுவதற்கோ காலத்தைக் கனிய வைக்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முயன்று வருகின்றார்.

பாராளுமன்றத்தைக் கலைத்துவிட அவருக்குப் பிரதான முட்டுக்கட்டையாக இருப்பது தற்போதைய சமாதான முயற்சிகள். இந்த முயற்சிகளின் முன்னேற்றகரமான நகர்வு ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைப் பொருளாதார ரீதியில் வலுப்படுத்தும் என்பது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு நன்கு தெரியும்.

என்னதான் நாட்டை அடைவு வைப்பதாகவோ வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பதாகவோ கூறிக் கொண்டாலும் அவ்வாறான ஒரு நடவடிக்கையை எடுக்காது சிறிலங்கா பொருளாதாரப் பின்னடைவிலிருந்து மீளமார்க்கமில்லை. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் தனது ஏழு வருட ஆட்சிக் காலத்தில் ரெலிக்கொம், எயர்லங்கா, பொசுபேற் நிறுவனம், காஸ் நிறுவனம் என பலவற்றைப் பல்தேசிய நிறுவனங்களுக்கு விற்றவர்தான். விற்று அவர் நடத்திய சமாதானத்துக்கான யுத்தம் படுதோல்வியில் முடிவடைந்தமையால் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவை மேலும் பலவற்றைவிற்றாலும் சரிக்கட்டுவது கடினமே. இவ்வாறான நிலையில் இப்பொழுது சமாதானத்தின் பெயரால் கிடைத்திருக்கின்ற நிதி சமாதானத்தின் நகர்வைப் பொறுத்தே கைக்குக் கிடைக்கவுள்ளது. உல்லாசப் பயணத்துறையென்றாலென்ன வெளிநாட்டு முதலீடு என்றாலென்ன சமாதானம் நிலை பெறுமா? என்ற கேள்வியில் தான் தங்கியிருக்கிறது.

பொருளாதார ரீதியில் பெரும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் ரயில்வேத் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் என்பனவற்றை விற்கப் போவதாக பொதுசன ஐக்கிய முன்னணி கூறுகிறது. உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் தாளத்துக்கு ஆடுவதாகவும் குற்றம் சுமத்துகிறது. இதே குற்றச் சாட்டையே இன்று பொ.ஐ.மு.வுடன் கூட்டுச் சேர முயலும் ஜே.வி.பி.யும் அன்று பொ.ஐ.மு. மீது சுமத்தியது.

எனவே இந்தச் சுழற்சியிலிருந்து இவ்விரு ஆட்சியாளர்களும் மீள முடியாத நிலைக்கே இவர்களின் கடந்த கால இனவாதச் செயற்பாடுகள் வழிவகுத்துள்ளன. எனவே இக் குற்றச்சாட்டுகள் மக்கள் மத்தியில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தாது.

ஆனால் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் ஏற்படவிடாது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போடும் முட்டுக் கட்டைகள் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு நிச்சயம் பலவீனத்தை ஏற்படுத்தும் அதிலும் குறிப்பாக சமாதான முயற்சிகளில் நீண்ட காலமாக இருந்துவரும் முட்டுக்கட்டை நிலை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை பாதிக்கும். அதன் காரணமாகவே இம்முயற்சிகளுக்கு இனவாதிகளின் துணையுடன் சந்திரிகா முட்டுக் கட்டை போட முயல்கிறார். இதன் மூலம் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான சூழ்நிலையைப் படிப்படியாக ஏற்படுத்த அவர் முயல்கின்றார்.

அதேவேளை ஐக்கிய தேசிய முன்னணிக்குள் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களை வெளியே இழுக்கும் நடவடிக்கைகளிலும் அவர் ஈடுபட்டு வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

இவற்றில் முக்கியமானது அண்மையில் மங்கள சமரவீர தலைமையிலான மூவர் குழு அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவை இரகசியமாகச் சந்தித்ததாகும். எஸ்.பி. திஸாநாயக்கவுக்கும் சந்திரிகா குமாரதுங்கவிற்கும் இடையில் முன்னர் மிகவும் சிறந்த உறவு இருந்துவந்தது. இதன் காரணத்தாலேயே சனாதிபதி சந்திரிகாவின் மிக முக்கிய திட்டமான "சமுர்த்தி"க்கு அவர் அமைச்சராக நியமிக்கப்பட்டார். முன்னாள் சனாதிபதி பிரேமதாசாவின் ஜனரஞ்சகத் திட்டங்களான "கிராம எழுச்சி", "மக்கள் சக்தி" திட்டங்களுக்கு மாற்றீடாக சனாதிபதி சந்திரிகா முன்வைத்த இத்திட்டம் மக்களுக்கு மிகவும் நெருக்கமானதாகும். இதன் பொறுப்பு எஸ்.பி. திஸாநாயக்கவுக்குக் கிடைத்தது. அதேவேளை, பல அமைச்சுப் பொறுப்புக்களை ஒருங்கே பெறும் வாய்ப்பும் அவருக்கு இருந்தது.

ஆனால், பொதுசன ஐக்கிய முன்னணியின் இரண்டாவது ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்திலிருந்து இருவருக்குமிடையிலான முறுகல் நிலை ஆரம்பித்தது. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எவரது ஆலோசனையையும் கேட்காது நடக்க முயல்கிறார் என வெளிப்படையாகவே எஸ்.பி. திஸாநாயக்க விமர்சித்து வந்தார். இதனையடுத்து தொடர்ந்த முரண்பாடுகள் அவர் கட்சியைவிட்டு விலகவும் காரணமாகியது. இவருடன் கூட ஏழுபேர் பொ. ஐ. மு.விலிருந்து வெளியேறிய போதும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தீவிர கோபத்திற்கு உள்ளானவர் எஸ்.பி. திஸாநாயக்கவே.

இதன் காரணமாக எஸ். பி. திஸாநாயக்க சமுர்த்தி நிதியில் மோசடி செய்து பெரிய மாளிகை கட்டி வருகிறார் என சனாதிபதி பிரச்சாரம் செய்தார். அதேவேளை பொதுத் தேர்தலில் தோல்வியுறப்போகும் சனாதிபதி சந்திரிகா மனநிலை பாதிக்கப்பட்டு வீதிகளில் ஓடப்போகிறார் என எஸ். பி. திஸாநாயக்க கூறி வந்தார். இந்த முரண்பாடு ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சரவைப் பதவி ஏற்பின்போதும் தொடர்ந்தது. இப்பொழுதும் தொடரவே செய்கிறது.

இந்நிலையில், திறைசேரியுடன் எஸ். பி. திஸாநாயக்கவிற்கு ஏற்பட்டுள்ள முரண்பாட்டைப் பயன்படுத்தி அவரை மீண்டும் பொ. ஐ. மு.விற்குள் இழுக்க எடுத்த முயற்சியானது ஆட்சியைக் கைப்பற்ற சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எவ்வளவு கீழ்நிலைக்கு இறங்கவும் தயாராக உள்ளதையே எடுத்துக் காட்டுகின்றது.

இதனைவிட முஸ்லிம் காங்கிரசிலுள்ள ரவூப் ஹக்கீமிற்கு எதிரான குழுவை தம் பக்கம் இழுக்கவும் சனாதிபதி முயன்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக இவர்கள் ஐ. தே. மு. அரசாங்கத்தை மிரட்டும் தொனியில் பேசி வருவதற்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இந்த முயற்சி காரணமாக இருக்க முடியும்.



கருஜெயசூரிய



எஸ்.பி. திஸாநாயக்க



நவீன் திஸாநாயக்க

இதேவேளை, மேல் கொத்மலை மின் திட்ட விடயத்தில் முரண்பட்டுள்ள ஆறுமுகம் தொண்டமான், கருஜெயசூரிய ஆகிய இரு அமைச்சர்களின் நிலைப்பாட்டைப் பயன்படுத்திக் கொள்ளவும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முயன்று வருகின்றார் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அமைச்சர் கருஜெயசூரிய ஐக்கிய தேசியக் கட்சியில் செல்வாக்கு மிக்கவராவார். அவருக்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் பனிப்போர் நிகழ்ந்து வருவது குறித்து பல காலமாகவே தகவல்கள் வெளிவந்துள்ளது. அவ்வாறான ஒருவரின் திட்டத்திற்கு அமைச்சர் தொண்டமான் போடும் முட்டுக்கட்டைகள் பாரிய முரண்பாட்டை ஏற்படுத்தக் கூடியதாகும். அமைச்சர் தொண்டமான் தலைமையில் மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போராட்டமானது, முன்னாள் அமைச்சர் காமினி திஸாநாயக்கவின் மகனும், அமைச்சர் கருஜெய சூரியவின் மருமகனுமான நவீன் திஸாநாயக்கவின் ஆதரவாளர்களால் குழப்ப முயற்சி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணிக்குள் உள்ள முரண்பாட்டைப் பயன்படுத்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முயற்சிகளை மேற்கொள்வதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

இவ்வாறு இருவேறு வழிகளில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைப் பலவீனப்படுத்த முயன்று வரும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தனது முயற்சியில் எதில் வெற்றி பெறுவார். வெற்றி பெறும்போது அவரது கட்சியின் பலம், பலவீனம் என்ன? என்பதும் நாட்டுப்பற்றாளர் முன்னணியின் உருவாக்கம் பெறும் சாத்தியத்தை வெளிப்படுத்தலாம்.

**வேலவன்**



# நாம் பலம்மிக்கவர்களாக இருந்தாலே எதனையும் சாதித்துவிட முடியும்

## - அரசியல்துறை துணைப் பொறுப்பாளர்

பலம்மிக்க சக்திகளாக இருந்தால் தான் நாம் எதனையும் சாதித்து விடமுடியும். எதையும் வென்றுவிட முடியும். சமாதான காலத்தில் கூட இதை நினைவில் கொண்டு செயற்பட வேண்டியவர்களாக உள்ளோம். சமாதானத்தின் மூலம் எமது இன விடுதலை விரைவாக கிடைக்க வேண்டும் என்றே ஆழமாக சிந்திக்கின்றோம். இவ்வாறு தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா விமானப் படையின் கொடூர விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஒன்பது பொதுமக்கள் நினைவாக நேற்று முன்தினம் கிளிநொச்சி உருத்திரபுரத்தில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபி திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சிறிலங்காவின் சுதந்திர தினத்தன்று இந்த மண்ணிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழ் இனத்தை படுகொலை செய்த நாளான அன்றைய நாளை ஒரு பெரு நினைவுகளை எமது உள்ளத்திலே வடுக்களாக சுமந்த இந்த இழப்புக்களை நினைவுகளாகக் கொண்ட இன்று உங்களின் எங்கள் தேச உறவுகளின் நினைவுகளைச் சுமந்து எல்லோரும் ஒன்றிணைந்து இந்நினைவுத் தூபியை அமைத்திருக்கின்றீர்கள்.

இந்த இனத்தின் விடுதலைக்காக நாம் இந்தத் தேசத்திலே 17,650 மாவீரர்களையும், 60,000இற்கு மேற்பட்ட எங்கள் தேச உறவுகளையும் நாங்கள் இழந்திருக்கின்றோம். இந்த உறவுகள் இந்த தேசத்தின் விடுதலைக்காகத் தம்மை இந்த மண்ணுக்கு உரமாக்கிக் கொண்டவர்கள்.

இந்த மண்ணிலே இவர்களுடைய செங்குருதிகள் ஆறாக ஓடியிருக்கின்றது. அது மட்டுமல்ல தேசத்திலும் ஆழமாகப் பதிந்திருக்கின்றது. ஓடுகின்ற இந்த நீரில் கூட இந்த வீரர்களின் வரலாறு இருக்கின்றது. எங்கள் தேசம் எங்கள் தேச வரலாறுகளை உச்சரித்துக் கொண்டிருக்கின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் 1992ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திர தினத்தன்று படுகொலை செய்யப்பட்ட அப்பாவி இளைஞர்களின், அப்பாவி மக்களின் நினைவுத் தூபியைத் தாங்கி நிற்கின்றோம்.

இந்தத் தேசத்தின் வித்துக்களில் ஒன்றாகவே. இதை, எண்ணிக் கொள்வோம். எதிரியின் கொடூரத்தால், எதிரியின் சிந்தனையினால், எதிரியின் திட்டமிடலால் சிதைக்கப்பட்ட வீரர்களை நாங்கள் இன்று நினைத்துக் கொள்வோம்.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக பெரு யுத்தம் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றது. இந்த யுத்தத்திலே 60,000இற்கு மேற்பட்ட மக்களை நாங்கள் இழந்திருக்கின்றோம். 17,650 மாவீரர்களை இழந்து இருக்கின்றோம் என்று கூறினேன். எங்கள் தலைவர் அவர்களுடைய தலைமையிலே இந்த மக்கள் எப்படியான அர்ப்பணிப்புக்களை இந்த தேசத்திற்காக செய்திருக்கின்றார்கள். எத்தனை வரலாறுகளைப் படைத்திருக்கின்றார்கள். அழிந்து விடாத பெரும் பெரும் வரலாற்றைப் படைத்த மாவீரர்களும் பெரும் பெரும் வரலாறுகளைப் படைத்த மக்களுமாகவே இந்தத் தேசம் வளர்ந்து கொண்டிருக்கின்றது.

மக்கள் தான் புலிகள் புலிகள் தான் மக்கள் என்கின்ற ஒரு பெரும் நிலையோடு நாம் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம்.

நாங்கள் ஒரு படை பலம் பொருந்திய சக்தியாக இருக்கின்றோம். அன்று பெரு வெற்றிகளை ஈட்ட பெரும் படையாக இருந்தீர்கள். தேசியத் தலைவரின் தலைமையிலேயே நீங்கள் படைகளாக இருந்தமையால் தான் எதிரி பலமிழந்து போகும் நிலை ஏற்பட்டது. உங்கள் பிள்ளைகள் புலிப்படைகளானார்கள். நீங்கள் பெரும் பலமான படையாளிகள். எனவேதான் நாங்கள் பலமானோம். பல வெற்றிகளின் அடிப்படையில் எதிரி பலமிழந்து தமது தோல்விகளைத் தோல்விகளாக ஏற்றுக் கொண்டு இன்று உலகமே வியக்கும் பெரும் சக்திகளாக, பலம்மிக்க சக்திகளாக இருந்து இன்று சமாதானம் என்கின்ற ஒரு சூழலின் காரணமாக இருக்கின்றது. எங்களுடைய மக்களின் படையின் பலமே என்பதை மறந்துவிடக் கூடாது.

எனவே. இன்று நாங்கள் பலம் மிக்க சக்திகளாக இருக்க வேண்டும் என்பது எமது தேசியத் தலைவரின் எதிர்பார்ப்பு. எமது மக்களுக்கு ஓய்வான ஒரு சமாதானமாகவே இன்று காட்சியளிக்கின்றது. சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எங்களை ஏமாற்றிவிடலாம் என்கின்ற எண்ணத்தை இந்த சிறிலங்கா அரசாங்கம் தவிர்க்க வேண்டும்.

இந்த சமாதானம் நிலைக்க வேண்டுமானாலும் எதிரி எம்மீது போரைத் தொடுக்க வேண்டுமென்றாலும் பலமிக்க சக்திகளாக முன்பு இருந்த பலத்தைவிட இன்று ஒரு பலம் மிக்க சக்திகளாக இருந்தால் தான் நாங்கள் எதையும் சாதித்து விட முடியும், எதையும் வென்றுவிட முடியும் என்பதை நினைவில் கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

இன்று சர்வதேச உலகம் சமாதானத்தி பால் எம்மை எதிர் பார்த்து நிற்கின்றது. இன்று சமாதானத்தின் விரோதிகள் யார் என்பதை இனங் கண்டு கொண்டு இருக்கின்றது. சமாதானத்தின் விரோதி யார் என்பதனை இந்த உலகம் மிக விரைவில் எதிர்கொள்ளப் போகின்றது.

சமாதானத்தின் மூலம் எமது இனத்தின் விடுதலை விரைவாகக் கிடைக்க வேண்டும் என்றே நாங்கள் ஆழமாகச் சிந்திக்கின்றோம். இல்லையேல் எதிரி எம்மைச் சீண்டித்தான் இந்த சமாதானத்தின் பால் வெற்றிபெற வேண்டுமானால் நிலையாக இருந்து இந்த உலகத்திற்கு நாங்கள் ஒரு பலம் மிக்கச் சக்திகள் என்பதை எடுத்துக்காட்டுவோம் எனவே. இந்த வரலாற்று உண்மைகளையும் இந்தப் பலத்தையும் நிலைத்து நிற்கின்ற ஒரு நிகழ்வாகவே இதனைக் காண்கின்றோம். எனவே இவர்களின் நினைவான இன்றைய நிகழ்வுகள்கூட எந்தப் பலத்தையும் எதிர்த்து நிற்கின்ற ஒரு நிகழ்வாகவே இருக்கின்றது. எதிரி பாரிய யுத்தத்தை தொடுத்த காலப்பகுதியில் ஒரு கொடூரத்தை எடுத்துக் காட்டுகின்ற நினைவுத் தூபியாக இது அமைகின்றது என்றார்.

(ப)

# ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் யாரை ஏமாற்ற முனைகிறது?

வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்கு அனுப்பிவைத்துள்ள திட்டவரைவுக்கும் சனாதிபதி சந்திரிகாவிற்கு அனுப்பி வைத்துள்ள திட்டவரைவிற்கும் இடையில் வித்தியாசங்கள் உண்டு என வெளியாகியுள்ள தகவல்கள் அரசாங்கத்தின் மீதான சந்தேகத்தைப் பரவலாக எழுப்புவதாகவுள்ளது.

இவ் இரண்டு திட்டவரைவுகளிலும் குறிப்பிடத்தக்க வேறுபாடு இருப்பதன் காரணமாகவே இக்குற்றச் சாட்டினை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் சனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது என்பது மறுக்க முடியாததொன்று. இதற்கு அரசாங்கம் தெரிவிக்கும் காரணம் எத்தனை தூரம் பொருத்தப்பாடானது என்பதும் கேள்விக்குரிய தொன்றாகவே உள்ளது.

அரசாங்கம் அளிக்கும் விளக்கத்தின்படி, அரசாங்கம் தயாரித்த வரைவின் பிரதி ஒன்று சனாதிபதிக்கு உடனடியாக அனுப்பப் பட்டது. நோர்வே அனுசரணையாளர்களினால் சில திருத்தங்கள் செய்யப்பட்ட பிரதி அவசரமாகப் புலிகளிடம் வழங்குவதற்காக நோர்வே அனுசரணையாளர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது என்பதே ஆகும். ஆனால், அரசாங்கத்தின் இவ்விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருக்குமா? ஏனெனில், தகவல் பரிமாற்றம் பெருமளவில் வளர்ச்சி கண்டுவிட்ட இன்றைய நிலையில் இவ் விளக்கம் ஏற்புடையதொன் றாக இருக்கமாட்டாது.

அதுமாத்திரமல்ல, இரு வரைவுகளுக்கும் இடையில் காணப்படுவதாக வெளியாகும் தகவல்கள் அரசாங்கத் தரப்புக் கூறுவது போன்று சிறியதொன்றே. நோர்வே அனுசரணையாளர்கள் தற்துணிவில் மேற் கொள்ளக் கூடிய திருத்தமாகவோ தெரிய வில்லை. ஏனெனில், இரு திட்டவரைவுகளிற்கான வேறுபாடானது அதிகாரப் பகிர்வில் பல முக்கிய விடயங்களில் வேறுபட்டதாகவுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு அரசாங்கம் நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக அனுப்பியுள்ள திட்டவரைவானது, பொலிஸ், பாதுகாப்பு, காணி, வரி போன்ற விடயங்கள் தவிர்ந்த ஏனைய அதிகாரங்களை இப்புதிய கட்டமைப்பிற்கு வழங்குவதாகக் கூறுகின்றது.

இதேவேளை சனாதிபதிக்கு வழங்கிய திட்டவரைவில் இவ் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு சகல அதிகாரங்களையும் கொண்டதாக இருக்கும் என குறிப்பிடப்பட் டுள்ளதாக சனாதிபதி செயலக வட்டாரங்களில் இருந்து வெளியாகும் தகவல்கள் கூறுகின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டே உடனடியாக இத்திட்ட வரைவினை அரசாங்கம் வெளியிட வேண்டும் எனப் பொ.ஐ. முன்னணி கோரிக்கை விட, எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ உடனடியாக இவ்விவகாரத்தை விவாதிக்க பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தரப்பில் இருந்து இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பிற்கு எதிர்ப்புக் கிளம்பும் என்பது எதிர்பார்க்கப்பட்டதொன்றே. எத்தகைய பலவீனமானதொரு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான வரைவை முன்வைப்பினும், அது எதிர்த் தரப்பினால் எதிர்க்கப்படுவதாகவே இருக்கும். ஆனால் தற்பொழுது அரசாங்கம் முன்வைத்த திட்ட வரைவே எதிர்க்கட்சியினரின் வேலையைச் சுலபமாக்கியுள்ளது என்று கூறலாம்.

எவ்வாறெனில், அரசாங்கம் சனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள திட்டவரைவானது, இடைக்கால நிர்வாகத்திற்குக் கட்டுப்பாடற்ற அதிகாரங்களை வழங்குவது போன்றதாக அமைந்துள்ளது. ஆகையினால், இத்திட்ட வரைவிற்கு எதிரான பிரச்சாரத்தை சனாதிபதி சந்திரிகா குமாதுங்கவினாலோ அன்றிப் பொ.ஐ. முன்னணியினாலோ அன்றி இனவாத சக்திகளினாலோ மேற்கொள்ளுதல் என்பது மிகவும் இலகுவானதொன்றாகிவிடும். அதாவது "சிங்கள தேசம் தாரைவார்க்கப் பட்டுவிட்டது" எனக் கூக்குரல் இடுவது சுலபமாகிவிடும்.

ஆனால், இக்கூக்குரலுக்கு முன்பாகவே திட்டவரைவால் ஏற்பட்டுள்ள மாறுபாடு சனாதிபதிக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் வாய்ப் பாகியுள்ளது. இன்றைய நிலையில் இடைக்கால நிர்வாகத் திட்டவரைவின் உண்மை வடிவம் எது. அது வெளிவந்த பின்னரே தம்மால் கருத்தெதுவும் கூறமுடியும் என சனாதிபதி பிரச்சினையை வேறுவிதமாகத் திருப்பிவிட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இது ஒருபுறம் இருக்க விடுதலைப்புலி களுக்கு அரசாங்கம் அனுப்பிவைத்த திட்டவரைவில் 'இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு' என்ற பெயரையே பயன்படுத்த அரசாங்கம் தயக்கம் காட்டியுள்ளமை தெரிகின்றது. அத்தோடு, மிகவும் குறைந்த மட்ட அதிகாரங்களும், முக்கிய துறைகளை தன்கையில் வைத்திருக்கவே அரசாங்கம் விரும்புவது போன்றும் உள்ளது.

இதனைப் பார்க்கையில் அரசாங்கம், விடுதலைப்புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பிற்கு ஏற்ற விதத்திலான ஒரு நிர்வாகக் கட்டமைப்பை வழங்குவதற்குத் தயாராக இல்லை என்பதையே வெளிப்படுவதாகிறது.

இந்த வகையில் பார்க்கையில், சனாதிபதியிடமும், விடுதலைப்புலிகளிடமும் வழங்கப்பட்ட இரண்டு திட்டவரைவும் இரு தரப்பினராலும் நிராகரிக்கப்படுவதற்கான வாய்ப்பைக் கொண்டவையாகவே உள்ளன. இந்நிலையில் தான் அரசாங்கம் இவ்விடயத் தில் கடைப்பிடித்துள்ள தந்திரோபாயம் பற்றித் தீவிரமாக சிந்திக்க வேண்டியுள்ளது.

அரசாங்கம் சமர்ப்பித்த திட்டவரைவுகளின் படி, இவ் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து இரு தரப்பும் நிராகரித்தல் வேண்டும் என்ற நோக்கிலானதாக இருப்பது போன்று தெரிகின்றது. ஆனால், சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம்/தேவையுடனும் இருக்கும் அரசாங்கம் இத்தகையதொரு நோக்கத்தின் அடிப்படையில் திட்டவரைவினைச் சமர்ப்பித்திருக்க முடியுமா? என்பதும் கேள்விக்குரியதொன்றே.

அவ்வாறானால், அரசாங்கம் இவ்விடயத்தில் கைக்கொள்ள எத்தனித்துள்ள தந்திரோபாயம் தான் என்ன? சனாதிபதிக்கான திட்டவரைவில் அனைத்து அதிகாரங்களும் எனக் குறிப்பிட்டுவிட்டு பின்னர் அதில் குறைப்புச் செய்வதன் மூலம் சனாதிபதியினதும், இன வாதிகளினதும் எதிர்ப்புக்களைச் சமன் செய்து விடமுடியும் எனவும்,

விடுதலைப்புலிகளுக்கு முதலில் நிராகரித்தவற்றில் சிலவற்றைப் பேச்சுவார்த்தை மேசையில் வைத்து வழங்கு வதன் மூலம் விடுதலைப்புலிகளைச் சமன் செய்துவிடலாம் எனவும் அரசாங்கம் கருதுகின்றதோ? என எண்ண வைக்கின்றது. ஆனால், இத்தந்திரோபாயம் எத்தனை தூரம் சாத்தியப்பாடானதொன்றாக இருக்கும் என்பது கேள்விக்குரியதொன்றாகவே இருக்கும். ஏனெனில், அரசாங்கம் சனாதிபதிக்கு வழங்கிய திட்டவரைவை வெளியிடுவதன் மூலமே சனாதிபதியினாலும், ஏனைய பொ.ஐ.முன்னணி மற்றும் பெளத்த அமைப்புக்களினாலும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பிற்கு எதிரான உச்சமானதொரு எதிர்ப்பினை வெளிக்கொண்டு வந்துவிட முடியும். இதன் மூலம் உருவாக்கக்கூடிய அரசாங்கத்திற்கு எதிரான பாதகமான சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்தையே சனாதிபதியினால் கலைத்துவிடவும் கூடும்.



மறுபுறத்தில், விடுதலைப் புலிகளிடம் அரசாங்கம் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்த யோசனைகள் தொடர்பாக வெளியாகிக் கொண்டிருக்கும் தகவல்கள் ஐ.தே. முன்னணி அரசாங்கத்தின் மீதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீதும் தமிழ் மக்களுக்கு அவநம்பிக்கையைத் தோற்றுவிக்கத்தக்கதாகவுமே இருக்கும். பேச்சுவார்த்தைகள் நடைபெறின் அவற்றில் ஒரு சில விடயங்களில் சிறிதளவு முன்னேற்றம் காணக்கூடியதாக இருக்கும் என நம்பிக்கை கொள்ளக்கூடியதாக இருப்பினும் தமிழ் மக்களின் எதிர்பார்க்கையை நிறைவு செய்யக்கூடியதாக அது இருக்குமா என்பது தமிழ் மக்கள் மத்தியில் கேள்விக்குரியதாகவே இருக்கும்.

ஏனெனில், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துடன் விடுதலைப்புலிகள் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு உடன்பாட்டை அமுலாக்கம் செய்வதில் அரசாங்கம் இன்னமும் இழுத்தடிப்புச் செய்வதாகவே உள்ளது. இந்நிலையில் புதிய இணக்கப்பாடு ஒன்று ஏற்படினும் கூட அமுலாக் கம் பெறுமா என்ற சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

இந்நிலையில், அரசாங்கம் எத்தந்திரோபாயத்தின் அடிப்படையில் இந்நகர்வை மேற்கொண்டிருப்பினும் சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காண்பதற்கும், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கும் அது கைகொடுக்குமா என்பது கேள்விக்குரிய தொன்றே.

ஏனெனில், இவ்விரண்டு வெவ்வேறான திட்டவரைவுகளை அரசாங்கம் முன்வைத்துள்ளதன் மூலம் யாரையோ அது ஏமாற்ற முற்படுகின்றது என்ற அபிப்பிராயமே உருவாகியுள்ளது. அவ்வாறு அரசாங்கத்திற்கு ஏமாற்றும் நோக்கம் இல்லாது இருப்பின்கூட இரு திட்ட வரைவுகளை முன்வைத்ததன் மூலம் அரசாங்கத்தின் மீது மக்கள் அவநம்பிக்கை கொள்ள இது காரணமாகியுள்ளது என்பதை நிராகரித்துவிட முடியாது.

சில வேளைகளில், அரசாங்கம் தாம் முன்வைத்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து இரகசியம் பேணப்படும் என நம்பிக்கை கொண்டிருக்கலாம். இதன் மூலம் திட்டவரைவில் இடம்பெற்ற விடயங்கள் வெளிவராத நிலையில் இரு திட்டவரைவு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் சிறிது காலத்திற்காவது வெளிவராது பாதுகாக்கப்படலாம் என நம்பியிருக்கலாம்.

ஆனால், இது சாத்தியமாகமாட்டாது என்பதை அரசாங்கம் கடந்த கால அனுபவங்களைக் கொண்டே விளங்கிக் கொண்டிருத்தல் வேண்டும். ஒரு புறத்தில் தகவல் ஊடகங்கள் திட்ட வரைவினை அறிவதில் தீவிர முனைப்புக் காட்டும் என்பதையும், இதன் காரணமாக ஏதோ ஒருவகையில் அவை கைகளில் இது சென்றுவிடும் என்பதையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உணர்ந்து கொண்டிருத்தல் வேண்டும்.

அது மாத்திரமல்ல, அரசாங்கத்தின் இரகசியங்கள் எதனையும் சனாதிபதி சந்திரிகா பேணப் போவதில்லை என்பதையும் அவர்கள் விளங்கிக் கொண்டிருத்தல் வேண்டும். இந்நிலையில், இரகசியம் பேணப்படும், பேண முடியும் என்ற ரீதியில் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பின் அது தவறான தீர்மானமாகவே இருந்திருக்க முடியும்.

ஆனால், எது எவ்வாறாயினும், இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவு குறித்து அரசாங்கம் இரண்டு வரைவுகளை முன்வைத்தமையானது அரசாங்கத்தின் மீதான அவநம்பிக்கையைத் தோற்றுவிக்கும் ஒன்றாகவே உள்ளது. அத்தோடு, அரசாங்கம் இதன் மூலம் யாரையும் ஏமாற்ற முனைந்ததோ இல்லையோ இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்த அதிகாரங்கள் தொடர்பான விடயங்கள் வாதப் பிரதிவாதங்களுக்கும், நெருக்கடிகளுக்கும் முகம் கொடுப்பதற்கு முன்பாக, இரண்டு திட்ட வரைவுகள் குறித்த நெருக்கடிகளுக்கு/சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை அது உருவாக்கியுள்ளது எனின் மிகையாகாது.

— ஜெயராஜ் —

# நாட்டை ஆறு வலயங்களாகப் பிரித்து பாரிய நீர்ப்பாசனத் திட்டம் தயாரிப்பு

## - அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம தெரிவிப்பு

நீர்ப்பாசன வசதிகளுக்கான பாரிய திட்டமொன்று தற்பொழுது தயாரிக்கப்படுகின்றது. நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள சிறிய நடுத்தர பாரிய நீர்த்தேக்கங்களை உள்ளடக்கியதாக இத்திட்டம் அமைந்திருக்கும் என்று அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

நிக்கவரெட்டியாவில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் இதுபற்றி அவர் உரை நிகழ்த்தினார். இத்திட்டத்தின் கீழ் நாட்டின் நீர் வளங்கள் பற்றி சரியான முகாமைத்துவத்தை மேற் கொள்வதில் விவசாயிகளுக்கு உதவி வழங்குவதில் முக்கியத்துவம் செலுத்தப்படும்.

உத்தேச திட்டத்திற்கமைய ஆறு வலயங்களாக நாடு பிரிக்கப்படும் என்றும் இது சம்பந்தமான சட்ட மூலம் பாராளுமன்றத்தில் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள தென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வாகனக் கடத்தல் குழுவொன்று ஆறு வாகனங்களுடன் கைது

(கொழும்பு)

கடத்தப்பட்ட ஆறு வான்கள், ஓட்டோ ஒன்று ஆகியவற்றுடன் வாகனக் கடத் தல் குழுவொன்றைச் சேர்ந்த ஐவர் கோட்டை பொலிசாரினால் கைது செய்யப் பட்டுள்ளனர்.மேலும், அவர்களால் நடத்தப்பட்டு வந்த போலி ஆவணங்கள் தயாரிக்கும் நிலையமொன்றும் பொரளையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி கொழும்பு காலி முகத்திடலில் கடத்திச் செல்லப்பட்ட வானொன்றைக் கண்டு பிடிக்க மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே மேலும் ஐந்து வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர்கள் நாட்டின் பல பகுதிகளிலும் வாகனங்களை கடத்தி போலி அத்தாட்சி பத்திரங்களுடன் விற்பனை செய்துள்ளமை விசாரணை களில் தெரியவந்துள்ளது.

# யாழ்.நகர்மத்தியில் குடும்பஸ்தர் மீது சிறிலங்கா சிப்பாய் தாக்குதல்

## தலையின் பின் பகுதியில் படுகாயம்


யாழ்.நகரில் நேற்றுக் காலை சிறிலங்கா இராணுவத்தினால் குடும்பஸ்தர் ஒருவர் மிக மோசமாகத் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.ஆரியகுளத்தை சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான கந்தராசா (வயது40) என்பவர் இராணுவத்தினரால் துப்பாக்கியின் பின் பகுதியால் தலையில் பலமாக தாக்கப்பட்டார்.இந்தச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது, பீல்ட் பைக்கில் வந்த இரு இராணுவத்தினர் ஹற்றன் நஷனல் வங்கி அருகேயுள்ள கடையொன்றின் முன்னால் பீல்ட் பைக்கை நிறுத்தினர்.

பீல்ட் பைக்கை அங்கிருந்து அகற்றுமாறு கோரியவேளை ஆத்திரமுற்று குறித்த நபரை துப்பாக்கியின் பின் பக்கத்தால் தலையில் கடுமையாக தாக்கியுள்ளனர்.இதனைக்கண்ட பொதுமக்கள் திரண்டு இராணுவத்தைத் தாக்க முற்பட்டதாகவும் தெரியவருகிறது. (33)

# வவுனியாவில் செப்ரெம்பரில் பொங்குதமிழிற்கு ஏற்பாடு

வவுனியாவில் பொங்குதமிழ் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி இந்நிகழ்வை கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொங்குதமிழ் ஏற்பாட்டாளர்கள் கூறியுள்ளனர். (10)


உங்களுக்கு
தேவையான
பலவகை ஊர்திகள்
வன்னி மண்ணில்
விற்பனையாகிறது!
பாண்டியன் வாணிபத்தின்
ஊர்திகள் விற்பனைப் பகுதி
நீங்கள் தென்பகுதிக்கு
சென்று ஊர்திகளை
தேடியலைந்து
பணத்தை விரயமாக்காமல்
உங்களின் காலடியில்
சேவை செய்ய பாண்டியன்
ஊர்திகள் விற்பனை வாணிபம்
காத்திருக்கிறது.
உங்களுக்குத் தேவையான
எவ்வகை ஊர்தியானாலும்
வேண்டுகை செய்துபெற்றுக்
கொள்ளலாம்.
உங்கள் தொடர்புகளுக்கான எமது முகவரி
பாண்டியன் வாணிபம்
ஊர்திகள்
விற்பனைப் பகுதி
யாழ்சாலை, கரடிப்போக்கு , கிளிநொச்சி.



## சிந்தனைக்கு

சமாதான வழிமூலம் எமது மக்களுக்கு நீதி கிடைக்குமானால் நாம் அதனை மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 30-07-2003

## ஒத்துழைப்பு!

"இடைக்கால நிர்வாகம் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் முன்வைத்துள்ள நகல் யோசனைகள் தமிழ் மக்களின் அபிலாசைகளை முழுமையாக நிறைவேற்றவில்லை. ஆனாலும், அதனை நாம் நிராகரிக்காது எமது சட்டவல்லுனர்களோடு அது குறித்து ஆலோசித்து வருகின்றோம். இந்த யோசனைகள் விரிவாக ஆராயப்பட்டு பின்பு மக்களின் எதிர்பார்ப்பிற்கு ஏற்றவாறு நகல் யோசனையொன்று அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படும்" என்ற விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களின் கூற்றுக்கள், சமாதான முயற்சிகள் முன்னேற்றம் காண விடுதலைப் புலிகள் இயக்கம் தன்னாலான ஒத்துழைப்பை வழங்கத் தற்பொழுதும் தயாராகவுள்ளது என்பதையே வெளிக்காட்டுவதாய் உள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் ஏற்கனவே சமர்ப்பித்திருந்த இரண்டு ஆலோசனைகள் விடுதலைப் புலிகளால் நிராகரிக்கப்பட்டிருந்தன. அவை தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவு செய்யவில்லை என்பதன் அடிப்படையிலேயே நிராகரிக்கப்பட்டிருந்தது. இந் நிலையில், அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட மூன்றாவது திட்ட வரைவு தற்பொழுது விடுதலைப்புலிகளின் பரிசீலனையில் உள்ளது.

தற்பொழுது பரிசீலனையிலுள்ள திட்டவரைவும், விடுதலைப் புலிகள் கோரிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பிற்கும் ஏற்புடைய அம்சங்களைக் கொண்டதாக இல்லை என்பதையே இத்திட்ட வரைவின் உள்ளடக்கம் குறித்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒரு விதத்தில் பார்த்தால் விடுதலைப்புலிகள் கோரிய நிர்வாகக் கட்டமைப்பின் அடிப்படை கூட இல்லாது மாற்றம் கொண்டதாகவே அரசாங்கம் சமர்ப்பித்துள்ள திட்டவரைவு காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, புதிய திட்ட வரைவின்படியும், இவ் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு புலிகள் கோரியது போன்று சிறிலங்கா அரசியல் யாப்பிற்கு அப்பாற்பட்டதாக இல்லாது சிறிலங்கா அரசியல் யாப்பிற்கு உட்பட்டதாகவே இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட முடியும்.

ஆயினும், விடுதலைப் புலிகள் இயக்கம் தற்பொழுது அரசாங்கத்தின் யோசனைகளைப் பரிசீலிக்க முற்பட்டமையானது ஸ்தம்பித நிலையை அடைந்துள்ள சமாதான முயற்சிகளுக்கு புத்துயிர் அளிக்கும் நோக்கிலானதே ஆகும். அத்தோடு, தமிழ் மக்களின் எதிர்பார்க்கை, அபிலாசைகள் எத்தகையதானது என்பதை வெளிப்படுத்தும் விதத்திலானதாகவும் இது அமையக் கூடியதாகும்.

விடுதலைப்புலிகள் இயக்கம் இதுவரையில் அரசாங்கம் தனது நல்லெண்ணத்தையும், சமாதானம் மீதான உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தும் வகையில் இடைக்கால நிர்வாகம் குறித்த முன்னேற்றகரமான திட்டம் ஒன்றை முன்வைக்கும் என்ற எதிர்பார்க்கையைக் கொண்டிருந்தது. ஆனால், அரசாங்கம் தமிழ் மக்களின் அபிலாசைக்கும் எதிர்பார்க்கைக்கும் ஏற்ற வகையிலான திட்டத்தை முன்வைக்கவில்லை. இந்நிலையில்தான் புலிகள் தமிழ் மக்களின் அபிலாசைகளை உள்ளடக்கியதான மாற்று யோசனைகளுடன் கூடிய திட்டம் ஒன்றை புலிகள் முன்வைக்க வேண்டியதாகியுள்ளது.

இம்மாற்று யோசனையானது, விடுதலைப் புலிகள் பந்தை அரசாங்கத்தின் பக்கத்தில் எறிந்து கொண்டிருக்கவில்லை என்பதை வெளிப்படுத்தும் ஒன்றாக இருக்கும். அத்தோடு, தமிழ் மக்களின் எதிர்பார்ப்பின் எல்லைகள் எத்தகையவை என்பதையும் வெளிப்படுத்துபவையாக இருக்கும்.

சிறிலங்கா அரசாங்கத்திற்கு விடுதலைப் புலிகள் எத்தகையதொரு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பைக் கோரி வருகின்றனர் என்பது தெரியாததொன்றல்ல. ஆனால், அரசாங்கம் அத்தகையதொரு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பினைப் பரிசீலனை செய்வதற்குத் தயக்கம் கொண்டுள்ளது என்பதே யதார்த்த நிலையாகும். இந்த நிலையில், விடுதலைப் புலிகள் மாற்றுத் திட்டம் ஒன்றை முன்வைக்கவுள்ளமையானது அரசாங்கத்திற்கு சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காண புலிகள் வழங்கும் சந்தர்ப்பமாகவே இருக்கும்.

ஆனால், புலிகள் வழங்கும் மாற்றுத் திட்டத்திற்கு இனவாத சக்திகளின் பலமான எதிர்ப்பு கிளம்பக்கூடும். இதனை எதிர்கொள்ள வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கே உரியதாகும். இதனை அரசாங்கம் வெற்றிகரமாகக் கையாள்வதைப் பொறுத்தே இடைக்கால நிர்வாகத்தின் எதிர்காலம் மட்டுமல்ல, இனப்பிரச்சினைத் தீர்விற்கான எதிர்காலமும் உள்ளது.

அவ்வாறு இல்லாது அரசாங்கம் விடுதலைப் புலிகளின் மாற்று யோசனைகளுடன்கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்த யோசனைகளைத் தானும் ஏற்றுக்கொள்ளாமலோ அன்றி இனவாத சக்திகளைக் கட்டுப்படுத்தத் தவறும் பட்சத்திலோ இம்மாற்றுத் திட்டம் தோல்வியடைவது தவிர்க்க முடியாததாகிவிடும். அது மாத்திரமல்ல, சமாதானப் பேச்சுவார்த்தைகளின் எதிர்காலமும் கேள்விக்குள்ளாகிவிடும்.

# பொலிஸ் காவலிலுள்ள கைதிகள் சித்திரவதைக்குள்ளாவது அதிகரிப்பு

## சிறில.பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா

(கொழும்பு)

பொலிஸ் காவலில் உள்ள கைதிகள் சித்திரவதைக்குள்ளாக்கப்படும் சம்பவங்கள் கடந்தசில மாதங்களாக அதிகரித்து வருவதாக பிரதம நீதியரசர் சரத் என்சில்வா குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து பெருமளவு முறைப்பாடுகள் உயர் நீதிமன்றத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

சந்தேக நபர்கள் பொலிசாரின் தடுப்புக் காவலில் சித்திரவதைக்கு உள்ளாக் கப்படுவதற்குக் காரணம் அனுபவம் குறைந்த பொலிசார் விசாரணைகளை மேற்கொள்வதாகும். மேலும் அனுபவம்கூடிய பொலிசாரில அதிகளவானோர் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று கூறிய நீதியரசர் குற்றவியல் விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிசாருக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

# ஐ.நா. அமைதிப்படையின் பயிற்சி கல்வி நிலையம் சிறிலங்காவில் அமைப்பு!

ஐ.நா.அமைதிகாக்கும் படையினரின் பயிற்சி அளிக்கும் கல்வி நிலையம் ஒன்று சிறிலங்காவில் அமைக்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

இதில்சிறிலங்கா கடற்படையினர் மற்றும் வேற்று நாட்டுப் படை யினருக்கும் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சிக் கல்லூரிக்காக 20பேர் கொண்ட முதலாவது அணி 2004ஆம் ஆண்டு சனவரியில் சேர்த்துக் கொள்ளப்படும். இதில் சிறிலங்கா கடற்படையினரோடு நேபாளம், பூட்டான், பாகிஸ்தான், இந்தியா, அமெரிக்கப் படையினர் பங்குகொள்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பயிற்சியை நடாத்து வதன்மூலம் சிறிலங்காப் படையினர் வெளிநாடுகளில் பணியாற்றும் சந்தர்ப்பம் ஏற்படுவதோடு சிறிலங்காவிற்கு பெருமளவு அந்நியச் செலா வணி கிடைக்கும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இக்கல்லூரிகளை அமைப்பதற்கான இடமாக சிங்கராசவனப் பகுதியில் இருக்கும் குக்குலுகம பிரதேசத்தை சிறிலங்காப் படையினர் தெரிவு செய்துள்ளனர். இந்த இடத்தை ஐ.நா அதிகாரிகளும் சிறிலங்காப் படையின் உயர் அதிகாரிகளும் கடந்த வாரம் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

# வட- கிழக்கு புகையிரத சேவையை அரசு புலிகளுக்கு வழங்கப்போகிறது

## ம.ஐ.மு. தலைவர் தினேஷ் குணவர்த்தன

வடக்கு-கிழக்கில் புகையிரத சேவை நடாத்துகின்ற உரிமையினை ஆளும் அரசு விடுதலைப்புலிகளுக்கு வழங்கவுள்ளதாக மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன குற்றம்சாட்டியுள்ளார். இதற்காகவே புகையிரத சேவையை அதிகார சபையாக மாற்றி அதனை தனியாருக்கு விற்பனைசெய்ய அரசு முடிவு செய்துள்ளது. இதன்மூலம் வடக்கு கிழக்கு புகையிரத சேவையினை நடாத்துகின்ற உரிமையை விடுதலைப்புலிகளுக்கு வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் இதனைத் தடுத்து நிறுத்த அனைத்துத் தொழிற் சங்கங்களும் ஒன்றிணைந்து போராடவேண்டும் என்று தினேஷ் குணவர்த்தன கேட்டுள்ளார்.

# ஆரம்பக் கல்வியினூடாக ஆங்கிலம் தாய்மொழியை மழுங்கடிக்கும் செயல்!

## - பேராசிரியர் சி.க. சிற்றம்பலம்

(யாழ்ப்பாணம்)

ஆரம்பக் கல்வியின் ஊடாக ஆங்கிலக் கல்வியைத் திணிக்க முயலும் இலங்கை அரசின் போக்கை பத்திரிகைகளும் ஊடகங்களும் உலகறிய உணர்த்த வேண்டுமென பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக் கல்வியமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பக்கல்வியை ஆங்கில மொழி மூலமான கல்வி மயப்படுத்தல் என்ற திட்டம் தாய்மொழியைச் சிறுவயதிலிருந்து ஆழமாகக் கற்கும் திறனை மழுங்கடிக்கும் என்பதால் இக்கல்வித் திட்டத்தைப் புறக்கணிக்க கல்விச் சமூகம் உட்பட அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டுமென அண்மையில் யாழ். மாவட்ட பத்திரிகையாளர்களிடம் பேசிய அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (33)

# அர்ப்பணிப்புடன் செயற்படும் பொலிசாருக்கு பாராட்டு

(கொழும்பு)

குற்றச்செயல்களைத் தவிர்ப்பதற்குஅர்ப்பணிப்புடன் பணியாற்றும் பொலிசாருக்கு மதிப்பளிக் கப்போவதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க அறிவித்துள்ளார்.

இத்தகைய உத்தியோகத்தர்களுக்குப் பதவியுயர்வுகள், சம்பளவுயர்வுகள் என்பவற்றை வழங்கி குற்றச்செயல்களைக் களைய ஊக்கமளிக்கப்போவதாகவும் குற்றச் செயல் ஒழிப்பில் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமானது என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

மோசடிகள் பற்றிய தகவல்களை இரகசியமாகப் பேணுவதற்கும், தகவல் தருவோருக்கு பாதுகாப்பளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக உள்துறை அமைச்சுக் கூறுகின்றது.

## விசாரணைக்கு உத்தரவு

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த பயணி ஒருவரின் பணம் கொள்ளையிடப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக விசாரிக்க படையினர் ஏற்பாடு செய்துள்ளனர். அடையாள அணிவகுப்பு ஒன்றை நடத்தி குற்றவாளியை இனம் காண 55ஆவது படையணியின் தலைமை அதிகாரி ஏற்பாடு செய்துள்ளார்.

# ஸ்ரீவ்வோ எனக்குப் போட்டியாளர் அல்ல!

## சச்சின் டெண்டுல்கர்

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 32 சதங்களை அடித்துள்ள அவுஸ்திரேலியா டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் ஸ்ரீவ்வோ தமக்குப் போட்டியாளர் அல்ல என்று இந்திய அணியின் நட்சத்திர நாயகன் என அழைக்கப்படும் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர் டெஸ்ட் ஆட்டங்களில் 34 சதங்களைக் குவித்துச் சாதனை படைத்துள்ளார்.

நட்சத்திர ஆட்டக்காரரான சச்சின் டெண்டுல்கர் 31 சதங்களுடன் அவருக்கு அடுத்த நிலையில் இருந்தார்.

தற்போது நடைபெற்று முடிந்த பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் விளையாடிய அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்ரீவ்வோ தொடர்ந்து இரண்டு சதங்களை அடித்து 32 சதங்களுடன் சச்சின் டெண்டுல்கரை பின்னுக்குத் தள்ளிவிட்டு இரண்டாம் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இந்நிலையில் மும்பையில் நேற்று முன் தினம் செய்தியாளர்களிடம் பேசிய சச்சின் டெண்டுல்கர்,

சாதனை படைத்துள்ள ஸ்ரீவ்வோவிற்கு வாழ்த்துக் கூறினார். அதிக சதங்களை அடித்து தனிப்பட்ட ரீதியில் சாதனை படைப்பதை விடவும் அணியின் வெற்றிக்காக விளையாடுவதே தமக்குத் திருப்தி அளிப்பதாகக் கூறியுள்ள அவர், தம்மால் அதிக சதங்களை அடிக்க முடியும் என நம்பிக்கை தெரிவித்துள்ள அவர், ஸ்ரீவ்வோ தமக்கு ஒருபோதும் போட்டியாளர் அல்ல என்றும் கூறியுள்ளார்.

## ஸ்ரீவ்வோவின் நம்பிக்கை!

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிக சதம் அடித்துள்ள இந்தியாவின் சுனில் கவாஸ்கரின் சாதனையை முறியடிக்கும் வாய்ப்பு தனக்கு இருப்பதாக அவுஸ்ரேலிய அணியின் தலைவர் ஸ்ரீவ்வோ தெரிவித்துள்ளார். சுனில் கவாஸ்கரின் சாதனையை முறியடிக்கும் வாய்ப்பு எனக்கு உள்ளது; முடியாது என்று சொல்வதற்கில்லை. இந்த சாதனையை நான் ஏற்படுத்தினாலும் 31 சதங்களில் இருக்கும் சச்சின் நிச்சயம் இதனை முறியடிப்பார் என்று கூறினார். கடந்த ஆண்டில் துடுப்பாட்டத்தில் திணறிய ஸ்ரீவ்வோ கடந்த சனவரி மாதம் முதல் இதுவரை நான்கு சதங்களை அடித்து தனது அபாரதிறமையை வெளிப்படுத்தி வருகின்றார் என்பது குறிப்பிடத் தக்கது.



# முதிர்ச்சிபெற்ற இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்

## இந்.முன்னாள் வெளியுறவுச் செயலர் ஜே.என்.டிக்சிற்

நாங்கள் எவ்வளவோ இழப்பிற்கு மத்தியில் செய்தவை நன்றி பாராட்டப்படாத செயலாகிவிட்டது. இப்போது நோர்வே மற்றும் வேறு நாடுகளில் இருந்து முதிர்ச்சி பெற்றவர்கள் வந்து தீர்வுகாணும் முயற்சிகளை வழிநடத்திக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் தீர்வு காண்பார்கள் என்றும் வன்முறையை முடிவிற்குக் கொண்டு வருவார்கள் என்றும் எதிர்பார்க்கின்றோம் என இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளரும், சிறிலங்காவிற்கான இந்தியத் தூதரகப்பணியாற்றி வருபவருமான ஜே.என். டிக்சிற் தெரிவித்துள்ளார். பி.பி.ஸி.யில் மேலும் அவர் தனது பேட்டியில் தெரிவிக்கையில்; இலங்கை-இந்திய ஒப்பந்தம் மூன்று தரப்பிற்குமிடையே செய்யப்பட்டது. இந்திய அரசு, சிறிலங்கா அரசு, தமிழீழ விடுதலைப்புலிகள் ஆகியோரே அந்த தரப்புக்களாகும். இதில் சிறிலங்கா அரசாங்கமும் விடுதலைப்புலிகளும்உடன்பாட்டிற்கு உண்மையாக நடந்துகொள்ளவில்லை. அவர்கள் இரண்டுபேருமே என்ன நினைத்தார்களென்றால் இந்த உடன்பாட்டை ஒரு தந்திரோபாயமாகப் பயன்படுத்திக் கொண்டு தத்தம் தரப்பை வலிமைப்படுத்திக்கொண்டு ஆட்பலம் சேர்த்துக்கொண்டு ஒருவரோடொருவர் போர் தொடுக்கலாம் என்று நினைத்துச் செயற்பட்டனர்.

இந்திய அரசு செய்த தப்பு என்னவென்றால் இவர்கள் இரண்டு பேரும் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவார்கள் - ஒப்புக்கொண்டபடி நடப்பார்கள் என்று நம்பியது தான். இவர்கள் உண்மையாக நடந்துகொள்ளாததை ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டதிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. காரணம் என்னவென்றால் விடுதலைப்புலிகளிடமும் சிறிலங்கா அரசிடமும் ஒப்பந்தப்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற நாணயம் இல்லாததால் இரண்டு தரப்புமே ஒப்பந்தத்தில் ஒப்புக்கொண்டபடி நடந்து கொள்ளவில்லை. இதன் காரணமாக கசப்புணர்வுகள் வளர்ந்தன. இது மோதலில் போய் முடிந்தது எனத் தெரிவித்தார்.

தற்போதைய சமாதானமுயற்சிகளில் இந்தியா நேரடியாகத் தலையிட்டு பங்கு வகிக்கவேண்டும் என்று இலங்கை அரசியல்கட்சிகள் சில கோரிவரும் அளவில் இந்தியா தலையிடுவதற்கு எந்த விதமான சங்கடங்கள் இருக்கின்றன. என்ற மற்றொரு கேள்விக்குப் பதிலளித்த அவர்

இந்தியாவிற்கு ஒரு சங்கடங்களுமில்லை. அழைப்பிற்கு நன்றி ஆனால் நாங்கள் தலையிடவிரும்பவில்லை என்பதுதான் எங்களது பதில்.

எங்களுடைய பின்னணியிலிருந்து இந்த எளிய பதிலைத்தான் தரமுடியும். நாங்கள் இதில் உண்மையான ஈடுபாட்டோடு நல்லது நடக்க வேண்டும்மென்று செற்பட்டோம். 1987முதல் 1990வரை எவ்வளவோ இழப்புக்களுக்கு மத்தியில் நாங்கள் உதவினோம். ஆனால், அது நன்றி பாராட்டப்படாத செயலாகிவிட்டது தான் மிச்சம். சிங்களவர்களும் நன்றி பாராட்டவில்லை, தமிழர்களும் நன்றி கூறவில்லை. இப்போது நோர்வே மற்றும் வேறு நாட்டிலிருந்தெல்லாம் மேலும் முதிர்ச்சி பெற்றவர்கள் வந்து தீர்வுகாணும் முயற்சிகளை வழிநடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் தீர்வு காண்பார்கள் என்றும் வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருவார்கள் என்றும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இந்த முயற்சிகளை இந்தியா ஆதரிக்கின்றது. இது வெற்றிபெற வேண்டுமென்றும் விளைகிறது. அமைதி திரும்பியபிறகு இலங்கையின் மறுசீரமைப்பிற்கும் வளர்ச்சிக்கும் இந்தியா சந்தோசமாக தனது பங்கை அளிக்கும் என்றார்.

# ஸ்ரீ.சு.க ட்சி-ஜே.வி.பி.பேச்சுக்கள் வெற்றியளித்து வருகின்றது

## ஜே.வி.பி. செயலாளர் டில்வின் சில்வா

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பி. இக்குமிடையிலான கூட்டமைப்பு குறித்து நடைபெற்று வரும் பேச்சுவார்த்தை வெற்றியளித்து வருவதாக ஜே.வி.பி. இன் செயலாளர் டில்வின் சில்வா கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர் மாநாட்டினை நடாத்திய அவர் கூட்டமைப்பு தொடர்பில் 90 வீதமான பேச்சுக்கள் முடிவடைந்துவிட்டன. மேலும் கொள்கை விவகாரங்கள் குறித்து ஆழமாகப் பேச வேண்டியுள்ளது.

கூட்டமைப்பின் பதவிகள் குறித்தும் பேச்சுவார்த்தையில் முரண்பாடு ஏற்படவில்லை என்றும் டில்வின் சில்வா கூறியுள்ளார்.

# சனாதிபதியின் அறிவுரைக்கிணங்க கிழக்கில் சமாதானக் குழுக்கள்

## மாகாண ஆளுனர் அலுவலகம் அறிவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் சிறிலங்கா சனாதிபதி மற்றும்பாதுகாப்பு அமைச்சரின் அறிவுரைக்கமைய சமாதானக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக வடக்கு கிழக்கு மாகாண ஆளுனரின் செயலாளர் அறிவித்துள்ளார்.

ஆவணி மாதம் முதலாம் திகதியிலிருந்து செயற்படவுள்ள இந்தக் குழு மாகாண ஆளுனரின் கீழ் செயற்படவுள்ளது.

சமூக ஒற்றுமையை வளர்த்தல், ஐக்கியத்தைப் பேணுதல் போன்ற நோக்கங்களைக் கொண்டு இந்தக் குழு செயற்படவுள்ளதாக ஆளுனரின் செயலாளர் எஸ். அமர்தலிங்கம் மேலும் கூறியுள்ளார்.

# 750 தமிழ் மொழிமூல ஆசிரியர் இவ் ஆண்டு நியமனமாவர்

(கொழும்பு)

இவ்வாண்டு 750 தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் நியமிக்கப் படவுள்ளதாக சிறிலங்காவின் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கூறியுள்ளார்.

இதன் மூலம், ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவுள்ள பாடசாலைகளுக்கு குறைந்தது ஒரு ஆசிரியரையாவது வழங்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே கொடித்துவக்கு இவ்வாறு கூறியுள்ளார்.

# யாழ்.வீடுகளில் முகாமிட்டுள்ள படையினர் அங்கிருந்து வெளியேற மாட்டார்கள்

## இராணுவத்தளபதி லயனல் பலகல்ல

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் வீடுகளிலும் மற்றும் பொதுக்கட்டடங்களிலும் முகாமிட்டிருக்கும் படையினர் அந்த இடங்களிலிருந்து வெளியேற மாட்டார்கள் என்று இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் லயனல்பலகல்ல தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் தற்போது படைமுகாம்களை மாற்றி அமைப்பது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கும் போது, யாழ் நகரில் வீடுதிகளில் முகாமிட்டுள்ள படையினர் மாற்றிடம் செல்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அங்கிருந்து படையினரை வெளியேற்றி வேறு இடங்களில் முகாம் அமைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி பொதுமக்களின் கடும் எதிர்ப்பால் தடைப்பட்டுள்ளது. ஆனாலும் இரு வீடுதிகளிலிருந்தும் படையினரை வெளியேற்றும் முயற்சி கைவிடப்படவில்லை என்றார் வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு பொருத்தமான இடங்கள் கிடைக்கும் பட்சத்தில் அவை மாற்றப்படும்.

அதிஉயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே படைமுகாம்களை மாற்றி அமைக்க 88 இடங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இதில் 15 இடங்கள் அரச காணிகள். தற்போது தனியார் வீடுகளிலும் காணிகளிலும் முகாம் அமைத்துள்ள படையினர் முன்னுரிமை அடிப்படையில் வரைவில் முகாம்களை மாற்ற இருக்கின்றனர்

போர் நிறுத்தம் அமுலிலுள்ள போதிலும் குடாநாட்டிலுள்ள படையினரின் எண்ணிக்கை குறைக்கப்பட மாட்டாது. நிலமையில் முன்னேற்றம் ஏற்பட்டால் மாத்திரமே படையினரின் எண்ணிக்கையைக் குறைப்பது பற்றி ஆலோசிக்கப்படும் என்றார்.

### எவ்வாறான...

சில்வா கூறியுள்ளார்.

இம்மாநாட்டில் விமல் வீரவன்ச கருத்துக் கூறுகையில் வடகிழக்கு இடைக்கால நிர்வாக சபையை தங்கத் தட்டில்வைத்துத் தாரைவார்க்கும் நடவடிக்கையிலேயே அரசாங்கம் இறங்கியுள்ளது. பயங்கரவாத இயக்கம் ஒன்றிடம் எவ்வாறு இடைக்கால நிர்வாகத்தை அரசு வழங்க முடியும். விடுதலைப் புலிகள் போராடிப் பெறமுடியாத இடைக்கால நிர்வாக சபையை அரசு அவர்களுக்கு வழங்க இருக்கிறது. வடக்கு கிழக்கில் வாழ்கின்ற முஸ்லீம்கள் மற்றும் சிங்களவர்களை வெளியேற்றுவதே புலிகளின் திட்டமாகும். அதற்கே அந்த இடைக்கால நிர்வாக சபைக் கட்டமைப்பினை புலிகள் பயன்படுத்தப் போகின்றனர்.

கண்காணிப்புக் குழுவின் செல்லப்பிள்ளையாக இருந்த புலிகள் இன்று அவர்களது சொல்லைக் கேட்பதாக இல்லை என்று கூறியுள்ளார்.

### புலிகளுடன்...

ஆனால் விடுதலைப் புலிகள் முதலில் ஆயுதங்களைக் கையளித்து, சமாதானம் நோக்கிய தங்களது முழுமையான விருப்பத்தைத் தெரிவிக்கும் போதே அரசு இத்தகைய இடைக்கால நிர்வாகத்தைக் கையளிக்கலாம் என்று தெரிவித்துள்ளார். ... ஆயுதங்களைக் கையளித்துவிட்டதா என்று நிருபர் வினவியபோது, அந்தக் கேள்விக்குப் பதிலளிக்க ... தேவ...ந்தா மறுத்து விட்டார் என்று ... தெரிவிக்கின்றன

### எமது தேசியத்...

வளர்ந்து வரும் படையணியாகும். இன்றும் அதன் தளபதிகளால் சிறப்புற வழிநடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. போர்த்துறையில் மட்டுமல்ல கலைத்துறையில், கணினித்துறையில் எனப் பல் வேறு துறைகளில் வளர்க்கப்பட்டு வருகிறார்கள். படைகளை வழிநடத்தும் தளபதிகளையும் அவர்களுக்கு கீழ் செயற்படும் போராளிகளையும் நாம் பாராட்ட வேண்டும்.

இன்றைய ...வில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கலந்து கொள்வது அன்பரசி நினைவு நாளை மேலும் சிறப்பாக்கியுள்ளது.

நீண்ட நாட்கள் அவரை எதிர்பார்த்திருந்த போதிலும் சந்தர்ப்பம் இன்று கைகூடியுள்ளது. அவரின் வருகை எமது பிராந்திய மக்களுக்கு நிறைவை நிச்சயம் ஏற்படுத்தும். இனிவரும் காலங்களில் வாய்ப்பு கிடைத்தால் எமது தேசியத் தலைவரை இங்கு அழைத்து வரவேண்டுமென்பது எமது அவா. காலம் கைகூடுமென நம்புவோம். எமது மாவட்ட நிலைமைகள் பற்றி தலைவர் மிகவும் ஆர்வமாகக் கேட்டார். நேரடியாக வந்தால் திருப்தியடைவார் என்றே நம்புகிறேன்.

### பொதுமக்களுக்கு...

வேண்டியுள்ளது. அதற்காகவே நாடு தழுவிய ரீதியில் சிறி.சு.கட்சி இத்தகைய கூட்டங்களை நடத்தவுள்ளது. கொழும்பு, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் முதலில் நடத்தப்படவுள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

### புலிகளின்..

பாளர் எழிலன் கருத்துத் தெரிவிக்கையில், சமாதானத்தைக் குழப்பும் வகையில் சமாதானத்திற்கு எதிரான விரோதிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ள மிகவும் கீழ்த்தரமான செயல் இதுவெனக்கூறியுள்ளார். (1.0)

### வவுனியாவில்...

முன்தினமிரவு 11.00மணியளவில் பயங்கரமான வெடிச்சத்தம் மக்களால் கேட்கக்கூடியதாக இருந்தது. இவ்வெடிச்சத்தம் புலிகளின் அரசியல் பிரிவு காரியாலயத்தில் நடந்ததாக அறியக்கூடியதாகயிருந்தது. இதனால் அரசியல் பிரிவைச் சேர்ந்த ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இத்தாக்குதலின் நோக்கம் என்ன? மக்கள் சமாதானத்தையும் அமைதியையும் விரும்பி எதிர்பார்த்து நிற்கும் இக்காலகட்டத்தில் இது போன்ற அசிங்கமான மக்கள் அருவருக்கத்தக்க இழிசெயலை செய்வோரை இவ் வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது என அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## ஒப்படைக்கவும்

தமிழீழ விளையாட்டுத்துறைக்குச் சொந்தமான ... துவிச்சக்கர வண்டி ஆண்கள் பாவனை மிதிவண்டி ஒன்று ... நீதிமன்று முன்பாக உள்ள வெண்தாமரை எரிபொருள் வாணிபத்தி லிருந்து கடந்த 27.07.2003 அன்று மாலை 7 மணியளவில் தவறுதலாக மாறி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. எடுத்துச் செல்லப்பட்டவரின் மிதிவண்டி எம்மிடம் தற்போது உள்ளது. எனவே எமது செயலகத்தில் அல்லது வெண்தாமரை எரிபொருள் வாணிபத்தில் தொடர்பு கொண்டு தங்களின் மிதிவண்டியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :-
த.சந்திரன்
நிர்வாக அலுவலர்,
தமிழீழ விளையாட்டுத் துறை,
தமிழீழம். (சி8447)

## மரண அறிவித்தல்

மணற்காட்டைச் சேர்ந்த மரியதுரை அல்வீனியல் அமலதாஸ் என்பவர் 29.07.2003 இல் அகால மரணமடைந்துள்ளார். இச் செய்தியை உற்றார் உறவினர்களுக்கு அறியத் தருகின்றோம். இறுதிக் கிரிகைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-
றெஜி

(3588)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகளில்



| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 04 | 30 |
| 07 | 07 |
| 1981 | 2001 |

### மேஜர் பரன்/பரஞ்சோதி

கணவதிப்பிள்ளை/ரதன்
முதலாம் வட்டாரம் முள்ளியவளை

விடுதலை வீரனாகி வித்தானாய்
இறுதிக்கான நின் ஆசைகள்? அன்பு
ஐயாவும் உன்னிடம் சேர்ந்து 63 நாட்கள்
ஆறுமா எங்கள் இதயம்?

30.07.2003 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவு அஞ்சலி நிகழ்வில் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆஸ்பத்திரி அருகாமை,
3ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.

செல்வண்ணா
(லே.மகவதாஸ்)
சகோதரர்கள்
குமார்

(3587)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூலை மாதம் 30 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.